வைத்திய சந்திரிகா

March 1940

JL
L:5m211,N25lc
M40-.2.4
210182

52

உ

# வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.
பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 2 March 1940. No. 4

## விஷய சூசிகை.

பக்கம்
ஸஹஸ்ரயோகம்—கரூர், பண்டித P. S. ராமசர்மா அவர்கள் 176–207

OFFICE OF THE REGISTRAR ... 8 APR 1940 MADRAS

| சந்தா விகிதம். | விளம்பர விகிதம் |
|---|---|
| வருஷ சந்தா:— | மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8 |
| உள் நாட்டுக்கு ரூ. 2 | „ „ ½-க்கு ரூ 4 |
| வெளிநாட்டுக்கு ரூ. 3 | „ „ ¼-க்கு ரூ 2 |

கிடைக்குமிடம்:—
Pandit, S. NARAYANA IYENGAR.
Editor and Publisher.
No. 2, Police Station West Lane, Madura.

...வெங்கடேஸ்வர் பிரஸ், மதுரை–40.

[விலை 0—3—0

3L
L·5 ண21, N25C
M40·2·4·
2|10|82

# வைத்திய சந்திரிகா.

ஆயுர்வேத சாஸ்திரத்தின் உண்மைப் பெருமையையும் அதன் ஆராய்ச்சியினால் மனிதசமூகத்திற்கு ஏற்படக்கூடிய பிரயோஜனத்தையும் தெளிவாக எடுத்து விளக்குவதற்கே நமது **மாஸிகை** வெளிவருகிறது. ஆயுர்வேத சாஸ்திரத்தில் பூர்ணபாண்டித்தியம் வாய்ந்த எமது ஆசிரியரும், மற்றும் பழைய முறையில் பயிற்சியுடையவர்களும் எழுதிவரும் விஷயங்கள் பண்டிதருக்கும், பாமரருக்கும் நல் விருந்தாக அமையும்.

வைத்திய சாஸ்திரத்தில் முக்கியமான பல புஸ்தகங்களின் மொழி பெயர்ப்பு நல்ல நடையில் வெளிவரும். வியாதிகளின் காரணம், குணம், சிகித்சை முதலியவைகளை மூடுமந்திரமில்லாமல் **"வைத்திய சந்திரிகா"** பிரதிமாதமும் தாங்கிவருவாள். ஒரு வைத்திய கலாசாலையைப்போல் நமது **"சந்திரிகா"** உதவுவாள்.

சந்திரிகையின் ஒவ்வொரு சஞ்சிகையிலும் கடைசி பாகத்தில் **வைத்தியசாரம்** என்றும் **ஔஷதசாரம்**என்றும் **ஸஹஸ்ரயோகம்** என்றும் மூன்று தனிப்புஸ்தகங்கள் தொடர்ச்சியாக வெளிவரும். ஒவ்வொரு வியாதியின் லக்ஷணம்,காரணம்,அவற்றின் சிகித்சை முதலியன விரிவாக **வைத்திய சாரத்தில்** எழுதப்படும். சரகம், சுசுருதம், அஷ்டாங்கஹிருதயம், அஷ்டாங்கசங்கிரஹம், பாவப்பிரகாசம், சார்ங்கதரம் பதினெண் சித்தர்கள், இருபத்தெட்டு சித்தர்கள் முதலியவைகளிலிருந்து பலதடவை அநுபவத்தில் குணம் கண்டறிந்த பஸ்மம், சிந்தூரம், லேகியம், கஷாயம் முதலியன **ஔஷதசாரத்தில்** தெளிவாக செய்முறையுடன் சொல்லப்படும். மலையாள தேசத்தில் பிரசித்தமான **ஸஹஸ்ர யோகமென்ற** நூலைத் தமிழில் மொழி பெயர்த்து விரிவான செய்முறைகளுடனும் உபயோகிக்கும் விதங்களுடனும் கூறப்படும். சுதேச முறைகளை நன்கு தெரிந்துகொள்ள விரும்புபவர்களுக்கு இது ஓர் இன்றியமையாத சாதனமாகும்.

**மானேஜர்,**
**"வைத்திய சந்திரிகா" மதுரை.**



9 - APR 1940
MALAYA

634. கருவங்கத்தை இரும்புக்கரண்டியில் உருக்கி திரிபலை கஷாயத்திலும், கரிப்பான் ரஸத்திலும், நாவிக்கிழங்கைப் பொடி செய்து கலந்த நெய்யிலும், வெள்ளாட்டின் பாலிலும், அதிமதுரக் கஷாயத்திலும் முறையே தனித்தனியாக ஏழுதடவை சாய்த்து அதைச்சலாகைசெய்து அஞ்சனக்கல்லுடன் சேர்த்தும், அல்லது தனித்தும் உபயோகிக்க திமிரம், அர்ம, அரிப்பு, சிகப்புக்கோடு, முதலியவை சமிக்கும்.

635. ரஸாதி—ரஸம், கருவங்கம், இவை வகைக்குத்தோலா ஒன்று, அஞ்சனக்கல் தோலா இரண்டு, இவைகளைப்பொடிசெய்து சுவல்பம் பச்சைக்கர்ப்பூரம் சேர்த்துக் கண்ணிலிட திமிரம் நீங்கும்.

636. உச்சிசூரியன்போலப் பிரகாசமுள்ள கன்னங்களுடன் கூடியும் காலத்தில் மரணமடைந்துமுள்ள கழுகின் முகத்தை மாத்திரம் எடுத்துப் பசு சாணத்தால் புடமிட்டு பஸ்மம் செய்து அந்த பஸ்மத்திற்குச்சமயிடை அஞ்சனக்கல்லை (ஸ்ரோதஞ்ஜனத்தை)ப்பொடித்துச்சேர்த்துச் சமயிடை பசுநெய்யால் கல்வத்திலிட்டு அரைத்துக் கண்களிலிட கண்களுக்குக் கழுகின் கண்போல மிகுந்த பலம் உண்டாகும்.

637. கிருஷ்ண சர்பத்தின் தலையை எடுத்து அதில் அஞ்சனக் கல்லையும் நெய்யையும் போட்டு ஒட்டிவிட்டு புகைவெளி வராமலிருக்கும்படி சீலைமண் செய்து புடமிட்டுப் பொடிசெய்து விலாமிச்சம் வேர், பச்சிலை, இவைகளைச் சமயிடை சேர்த்துக் கண்ணிலிட விழிகள் வெடித்திருந்தபோதிலும் குணமாகும்.

638. சின்னப்படி 16 படி பசும்பாலில் இறந்த ஒரு கிருஷ்ண சர்ப்பத்தையும் நான்கு தேள்களையும் போட்டு 21 நாள் வைத்திருந்துபிறகு அதைக்கடைந்து வெண்ணெயெடுத்து ஒரு கோழிக்கு அதைமாத்திரம் உணவாகக்கொடுத்து அக்கோழியின் மலத்தை எடுத்து கண்ணில் இட குருடனுக்கும் பார்வையுண்டாகும்.

639. கிருஷ்ணஸர்ப்பத்தின் வஸை (மாமிசத்தைத்தணலில் வதக்கி எடுக்கும் எண்ணெய்க்கு வஸா எனப்பெயர்) சங்கு, தேத்தான்

விதை, அஞ்சனக்கல் (ஸௌவீராஞ்சனம்) இவைகளின் ரஸக்கிரியை கண்களுக்கு உறுதியையளிக்கும்.

640. அப்பிரதிஸாரம்—திப்பிலி 10, ஸுவர்ணமாக்ஷிகம் அரைத்தோலா, துத்தம் தோலா 4, அதிமதுரம் தோலா ஒன்று, இவைகளைப்பசும்பாலில் நனைத்துப்பிறகு எரித்துப்பொடியாக்கிக் கண்களிலிட திமிரம் நீங்கும்.

641. அக்ஷாதி—தான்றிக்காய்விதை, மிளகு, நெல்லித்தோல், துத்தம், அதிமதுரம், இவைகளைச்சமபிடையாக எடுத்துத்தண்ணீர் விட்டரைத்து மாத்திரையுருட்டி நிழலில் உலர்த்திக் கண்களிலிட திமிரங்கள் நீங்கும்.

642. ஷண்மாக்ஷிக யோகம்—மிளகு தோலா ஒன்று, நெல்லி வற்றல் தோலா இரண்டு, சங்கு தோலா மூன்று, (கடல்நுரை தோலா மூன்று என்று சிலர்) துத்தம் தோலா 4, அஞ்சனக்கல் தோலா ஐந்து, சுவர்ணமாக்ஷிகம் தோலா 6, இவைகளைப்பொடிசெய்து கண்களிலிட திமிரம், அர்ம, முதலியன தீரும்.

643. விமலகுளிகை—அதிமதுரம், மிளகு, திப்பிலி, லோத்திப்பட்டை, தேவதாரு, மஞ்சள், திரிபலை இவை சமமாக எடுத்து குளிர்ந்த ஜலத்தால் அரைத்து மாத்திரையுருட்டி நிழலில் உலர்த்தி கண்களிலிட திமிரம், காசம், முதலியன தீரும்.

644. சூர்ணாஞ்சனம்—வைரம் முதலிய ரத்னங்கள், (கிடைத்தமட்டில் ரத்னங்களை எடுத்துக்கொள்ளவும்) வெள்ளி, ஸ்படிகம், சுவர்ணம், ஸ்ரோதோஞ்சனம், தாமிரம், அரப்பொடி, சங்கு, சந்தனம் (பீசந்தனம் என்ற வகையை எடுத்துக்கொள்ளவும்) காவிக்கல், (குங்குமப்பூவையும் சிலர் இதில் அதிகப்படியாகச் சேர்க்கின்றனர்) இவைகளைச் சமமாக எடுத்து நன்றாகப்பொடிசெய்து கண்களிலிட எல்லா கண்நோய்களும் நீங்கும்.

645. [illegible]—எள்ளெண்ணை, தான்றி எண்ணை, கரிப்பான்[illegible], வேங்கைப்[illegible]கஷாயம், இவைகளைச் சமமாக



எடுத்து இரும்பு பாத்திரத்தில் காய்ச்சி வடித்து அத்தைலத்தால் நஸ்யம் செய்ய கண்களுக்கு பலம் கொடுக்கும்.

646 ஜீவந்தியாதி தைலம்—அடபதியன்கிழங்கு தோலா 400 இடித்துப்பானையில்போட்டு ஜலம் 16 படிவிட்டு எட்டிலொன்றாகவற்ற வைத்துக் கஷாயம்செய்து வடிகட்டி அதில் நல்லெண்ணை ஒருபடி பசும்பால் ஒருபடிவிட்டு அதில் குருந்தொட்டி, பெருங்குருந்தொட்டி நாகபலா, அடபதியன்கிழங்கு, சதாவரி, இவை வகைக்குத்தோலா 4, அதிமதுரம் தோலா 16 இவைகளைப்பொடிசெய்து போட்டு இரும்பு பாத்திரத்தில் பதமாகக்காய்ச்சி வடித்து அத்தைலத்தை இரும்புபாத்திரத்திலேயே ஒருமாதம் வைத்திருந்து பிறகு நஸ்யம் செய்ய கண்நோய்கள் தீரும்.

647. ஸிதைரண்டாதி-வெள்ளை ஆமணக்குவேர், சடாமஞ்சி, கண்டங்கத்திரிப்பழம், தேவதாரு, வசம்பு, தகரை, கோஷ்டம், பில்வவேர், இவை வகைக்குத்தோலா ஒன்று இடித்துப்பொடிசெய்து நல்லெண்ணை படி அரை பசும்பால்படி அரை, ஜலம்படி இரண்டு சேர்த்துத்தைலபதமாகக்காய்ச்சி வடித்து நஸ்யம்செய்ய கண்ரோகங்கள் அனைத்தும் தீரும்.

648. சதாஹ்வாதிகிருதம்—சதகுப்பை, கோஷ்டம், விலாமிச்சம்வேர், காகோலீ, க்ஷீரகாகோலீ, அதிமதுரம், தாமரைக்கிழங்கு, ஸரலம், திப்பிலி, தேவதாரு, வகைக்குத்தோலா $1\frac{1}{2}$ இடித்துப்பொடி செய்து அதில் நல்லெண்ணை படி ஒன்று, பசும்பால் படி 8 சேர்த்துப்பதமாகக்காய்ச்சி வடித்துக் கண்களில் தர்பணம்செய்ய கண் ரோகங்கள் தீரும்.

649. கருப்புமான் மேதஸ்ஸு எடுத்து அதையும் பசும்பாலையும் சம அளவாக எடுத்துச்சேர்த்துக் காய்ச்சி பிறகு கடைந்து வெண்ணை யெடுத்து அந்த வெண்ணை படி ஒன்று, அதிமதுரம், விலாமிச்சம்வேர், சந்தனம், இவை வகைக்குத்தோலா $5\frac{1}{4}$ இடித்துப் பொடிசெய்து ஒன்றுசேர்த்துப் பதமாகக்காய்ச்சி வடித்து கண்களில் தர்பணம்செய்ய கண்ரோகங்கள் தீரும்.

650. ஷ்ரீபேராதிதைலம்—தசமூலகஷாயம், பசும்பால், நல்லெண்ணை, இவை வகைக்குச்சின்னப்படி ஒன்று, ஜலம்படி இரண்டு, இவைகளைச்சேர்த்து அதிம் விலாமிச்சம்வேர், தேவதாரு, மஞ்சள், மரமஞ்சள், திப்பிலி, இவை வகைக்குத்தோலா $3\frac{1}{4}$ இடித்துப்பொடி செய்து போட்டுப் பதமாகக்காய்ச்சி வடித்து நஸ்யம்செய்ய கண் நோய்கள் தீரும்.

651. கிருஷ்ணாதி—திப்பிலி, அரப்பொடி, திரிகடு, இந்துப்பு, திரிபலை, அஞ்சனக்கல், இவைகளும் முயல், பசு, கழுதை, ஸிம்ஹம், ஒட்டகை ஆகிய இவைகளின் பற்களும் நெற்றி எலும்பும், தறுநீண்டிக்கிழங்கு, மிளகு, சங்கு, சந்தனம், கடல்நுரை, இவை சமமாக எடுத்துக் கல்வத்திலிட்டு முலைப்பால், ஆட்டுப்பால் இவைகளால் அரைத்து மாத்திரைசெய்து கண்களில் இட எல்லா நோய்களும் தீரும்.

652. திராக்ஷாதி—திராக்ஷைப்பழம், விலாமிச்சம்வேர், லோத்திப்பட்டை, அதிமதுரம், சங்கு, தாமிரம், சந்தனம், தாமரைக் கிழங்கு, பத்மகாஷ்டம், செங்கழுநீர்க்கிழங்கு, இவை சமமாக எடுத்து ஆட்டுப்பாலால் அரைத்து மாத்திரைசெய்து கண்களில் போட ரக்ததிமிரம் சமிக்கும்.

653. மதுகாதிதைலம்—இலுப்பைவைரம், வாய்விளங்கம், மிளகு, தேவதாரு, இவை வகைக்குத்தோலா 4, நல்லெண்ணை, பசும் பால், வகைக்குச்சின்னப்படி ஒன்று, ஜலம் சின்னப்படி மூன்று, இவைகளைச்சேர்த்துப் பதமாகக்காய்ச்சி நஸ்யம்செய்ய கண்நோய்கள் தீரும்.

654. மதுகாதிலேபம்—இலுப்பைவைரம், வாய்விளங்கம், மிளகு, தேவதாரு, இவைகளைச் சமமாக எடுத்து ஜலம்விட்டரைத்து முகத்தில் பத்துபோட கண்நோய்கள் தீரும்.

655. நதாதிதைலம்—தகரம், செங்கழுநீர்க்கிழங்கு, நன்னாரி, அதிமதுரம், சண்டக்கிழங்கு, இவைகளைச் சமயிடையாக எடுத்துக் கஷாயம்செய்து அதற்குச்சமம் நல்லெண்ணை சேர்த்து முன்



சொன்ன சரக்குகளையே கல்கமாகவும் சேர்த்துப்பதமாக வடித்து நஸ்யமும், சிரோபஸ்தியும் செய்ய கண்நோய்கள் தீரும்.

656. குடாதி—வெல்லம், கடல்நுரை, அஞ்சனக்கல், திப்பிலி, மிளகு, குங்குமப்பூ, இவைகளைச் சமமாக எடுத்துப் பொடித்துத் தேன்விட்டரைத்து மைபோலசெய்து கண்களில்போட காசம் சமிக்கும்.

657. நகுலாந்தத்தில் திரிதோஷ திமிரத்தில்போல சிகித்சை செய்யவேண்டும். கிருதாதி—சுவர்ணமாக்ஷிகம், காவிக்கல், தாளிசபத்திரி, இவைகளைச் சமமாக எடுத்துப்பொடித்து நெய், தேன், பசுவசாணிரஸம், இவைகளால் முறையே அரைத்து கண்களில் இட இராக்கண் நிவிருத்தியாகும்.

658. கரஞ்சிகாதி—புங்கம்விதை, செங்கழுநீர் கிழங்கு, சுவர்ணகாவிக்கல், தாமரைகேஸரம், இவைகளைச் சமமாக எடுத்துப் பொடித்துப்பசும்சாணிரஸத்தால் அரைத்து மாத்திரைசெய்து கண்களிலிட இராக்கண் தீரும்.

659. கௌந்த்யாதி—அரேணுகம், திப்பிலி, அஞ்சனக்கல், இந்துப்பு, இவைகளைச்சமமாக எடுத்துப்பொடித்து ஆட்டுமூத்திரத்தால் அரைத்து மாத்திரைசெய்து கண்களில் இட இராக்கண் தீரும்.

660. காலானுசார்யாதி—நன்னாரி, திரிகடு, திரிபலை, தாளகம் மனோசிலை, கடல்நுரை, இவைகளைச்சமமாக எடுத்துப்பொடிசெய்து ஆட்டின் பாலால் அரைத்து மாத்திரைசெய்து கண்களில் உபயோகிக்கக்கண்நோய்கள் தீரும்.

661. அடபதியன் இலையை வேகவைத்துத்தின்ன இராக்கண் சமிக்கும்.

662. ஸ்வர்ணாதி—சுவர்ணம், காவிக்கல், சிறுதேக்கு, இவைகளைச்சமயிடையாக எடுத்துப்பொடித்து அந்தச்சூர்ணத்தையாவது அல்லது அச்சூர்ணத்தை மெழுகாக அரைத்து அதையாவது கண்களில் இட தூமரம், விதாஹங்கள் முதலியன தீரும்.

663. ஸுநேத்ரீவர்த்தி—திரிகடு, திரிபலை, வாலுளுவையரிசி, புங்கம்விதை, வாய்விளங்கம், இவை வகைக்குத்தோலா 4, தாமரைக்கிழங்கு, அதிமதுரம், தாமிரப்பொடி, இந்துப்பு, ஸ்படிகம், சங்கு, இவைவகைக்குத்தோலா 3, வசம்பு' அஞ்சனக்கல், காவிக்கல், சந்தனம், செஞ்சந்தனம், அரக்கு, மஞ்சள், மரமஞ்சள், வெட்டித்தோல் லோத்திப்பட்டை, இவை வகைக்குத்தோலா 2' துத்தம், பீதரோகணீ, பச்சைக்கர்ப்பூரம், இவை வகைக்குத்தோலா ஒன்று, இவைகளைக்கல்வத்திலிட்டுப்பொடித்து புங்கை ரஸத்தால் அரைத்து மாத்திரைசெய்து உலர்த்திக்கொண்டு கண்களில் இட எல்லாவிதமான கண்நோய்களும் தீரும்.

664. மனச்சிலாதி—மனேசிலை, இந்துப்பு, அன்னபேதி, சங்கு, திரிகடு, ரஸாஞ்ஜனம், இவைகளைச்சமயிடையாக எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்துத்தேன்விட்டு மெழுகாக அரைத்துக் கண்ணில் இட சுக்ரம், காசம்' அர்ம, திமிரம், இவை தீரும்.

665. திரிபலாதி—திரிபலை, திரிகடு, வாய்விளங்கம், வசம்பு, தாளகம், ரஸாஞ்ஜனம், [illegible]த்திப்பட்டை, தாமிரப்பொடி ஸ்[illegible], மஞ்சள், மரமஞ்சள், கோரோசனம், ஏலம், சங்கு, சந்தனம், மாக்ஷிகம், அகில், அரக்கு, தேத்தான்விதை, அதிமதுரம், கடல்நுரை, பச்சைக்கர்பூரம், பீதரோகணீ, காரீயம், கோஷ்டம், காவிக்கல், பேய்க்கொம்மட்டிவேர், பசுவின்பல், நீர்முள்ளிவேர், முத்து, துத்தம், அரேணுகம், ஆமையோடு, சோகி, காந்தக்கல், இவைகளைச்சமமாக எடுத்துப்பொடித்துக் கல்வத்திலிட்டு சீந்தில், தான்றி, வேம்பு, புங்கு, துளசி, மருது, ஜாதி, முருங்கை, கரிப்பான், கொம்மட்டி மாதளை, இவைகளின் ரஸத்தாலும் கள், பசும்பால், தேன், நெய், இவைகளாலும் கிரமமாக அரைத்து மெழுகைப்பத்திரப்படுத்திக் கண்களில் இட திமிரம், காசம், விரணசுக்ரம், அஜகா, முதலிய ரோகங்கள் தீரும். இது நிமியால் சொல்லப்பட்டது.

சிலேஷ்மத்தால் ஏற்பட்ட காசத்தில் குத்தி எடுக்கும் விதியும் அவ்விதம் குத்தி எடுத்தால் பிறகு செய்யவேண்டியதும் இனி சொல்லப்படும். முதலில் வமனம் விரேசனம்செய்து சுத்தி நன்று



கச்செய்யவேண்டும். பிறகு நல்லநாளில் நல்ல முகூர்த்தத்தில் அதிக சீதோஷ்ணாதிகள் இல்லாத காலத்தில் வியாதிஸ்தனைக்குளிக்கச்செய்து சாப்பிடச்செய்து மத்தியானத்திற்குமுன் வெளிச்சம் நன்றாக இருக்கும் இடத்தில் இரண்டு ஆஸனம்போட்டு ஒன்றில் வியாதிஸ்தனை உட்காரவைத்து மற்றொன்றில் வைத்தியன் உட்கார்ந்துகொண்டு வியாதிஸ்தனை அசையாமல் கட்டி கண்ணை வாயால் ஊதி ஸ்வேதம்செய்து கட்டைவிரலால் சற்று கசக்கி கண்ணின் மலத்தை இளகச்செய்து தன் மூக்குக்குச்சரியாக உட்காரவைத்துத்தலையை அசையாமல் பிடித்துக்கொள்ளச்செய்து கருவிழியிலிருந்து அரைவிரல் தள்ளி கடைக்கண்ணிலிருந்து கால்விரல் தள்ளி சலாகையைச் சுண்டுவிரல் நடுவிரல் கட்டைவிரல் இவைகளால் கெட்டியாகப்பிடித்துக்கொண்டு முன்சொன்ன இடத்தில் கொஞ்சம் முறித்து சலாகையை தேவரந்திரவழியாகச் செலுத்தி மேல்கீழ் போகாமல் திரித்து மலத்தை இளகச்செய்து வேதிக்கவும். வலது கண்ணை இடதுகையாலும் இடதுகண்ணை வலது கையாலும் வேதிக்கவும். குத்து நேராகவிழுந்தால் வலி இருக்காது. ஒருதுளி ஜலமும்வரும். பிறகு வியாதிஸ்தனை ஆச்வாஸப்படுத்தி முலைப்பால்விட்டு சலாகை நுணியால் வலிக்காமல் திருஷ்டிமண்டலத்தை லேகனம் செய்துகபத்தை மூக்குக்குச்சமீபமாகக்கொண்டுவந்து தும்மல் வரும்படிசெய்து ஆடைபோல் எடுக்கவும். அப்பொழுது அந்த மலம் நன்றாக இளகாவிடில் முலைப்பால்விட்டு தாரைசெய்து வியர்வை பிடித்து மலம் வெளிவந்தவுடன் துணியை நெய்யில் நனைத்துக்கண்ணைக்கட்டி மல்லாந்துபடுக்கவைக்கவும். ஒரு கண்தான் குத்தியிருந்தால்மறு பக்கமாகப்படுக்கச்செய்யவும். இரண்டுகண்ணும் வேதித்திருந்தால் மல்லாக்கப்படுக்கவைக்கவும். தலைக்கும் காலுக்கும் மஞ்சிஷ்டி (306) தைலம் தேய்க்கவும். நல்லபத்தியம் வேண்டும். காற்று வெய்யில் முதலியன கொஞ்சமும் கூடாது. இளைப்பு, ஜலதோஷம், தும்மல் குளிர்ந்த ஜலம் சாப்பிடுவது, கீழ்பார்த்து உட்காருவது, பல் தேய்த்தல் கெட்டியான பதார்த்தம் கடித்துச்சாப்பிடுவது, இவைகள் ஏழுநாள் கூடாது. வயறு நிறையச்சாப்பிடக்கூடாது. மஹார் ஸ்நேஹபானம்போல் பத்யம் இருக்கவேண்டும். சிகித்ஸை முடிகிற வரையிலும் குறைந்த அளவிலேயே சாப்பிடவேண்டும். கண்ணில்

வலி இருந்தால் இளம் சூடான ஜலம் தாரைவிடவும். யவைசாதம் சாப்பிடவும். நெல்லிக்காய் திரிகடு, நெய், கூழ், கஞ்சி, இவை சாப் பிடலாம். மூன்றுவதுநாள் கட்டு அவிழ்த்து மருந்து ஜலத்தால் அலம்பி முன்போல் கட்டி பிறகு ஏழாவதுநாள் அவிழ்த்து வாத ஹரங்களான கஷாயத்தால் அலம்பி கண் சரியாக ஆகிறவரையிலும் பத்தியமாகவே இருக்கவேண்டும். நெருப்பு, சூர்யன், வெய்யில், இவைகளைப் பார்க்கக்கூடாது. வேதத்திலும் பிறகு ரக்ஷையிலும் தவறுதல் ஏற்பட்டால் வலி அதிமந்தம் முதலியன காணும். அதற்கு உடன் தூர்வாதிக்ருதம் தாரையும் சததௌதக்ருதலேபனம், சந்த ஞதிக்ருதம் (225) தாரை திரிபலை அரைத்துப்போடுதல், முதலியன செய்யவும். இது வேதவிதி(காசம் குத்தும் விதி) ஸர்வாக்ஷிரோகங்க ளில் வாதாபிஷயந்தம் வாதாதிமந்தம், ஹதாதிமந்தம், அன்யதோ வாதம், வாதபர்யயம், பித்தாபிஷ்யந்தம் பித்தாதிமந்தம், சிலேஷ்மா பிஷ்யந்தம், சிலேஷ்மாதிமந்தம், ரக்தாபிஷ்யந்தம், ரக்தாதிமந்தம், விக்ரேணனம், சுத்தாக்ஷிபாகம், அல்பசோபம், அக்ஷிபாகாத்யயம் அம்லோஷிதம், இந்த ப் ப தி னு ரு க் கு ம் தாரைசெய்வதற்குமுன் தீக்ஷண திரவியங்களால் கண்டுஷம், நஸ்யம், செய்விக்கவும். (மிளகு திப்பிலி முதலியன தீக்ஷண திரவியங்கள்) உபவாஸம் நல்லது. கடுக்காய் இந்துப்பால் 639) புறம்படை (அரைத்து மேல்போடு வது) செய்யவும். சர்க்கரை, மிளகு என்ற யோகமும் நல்லது. காட்டுக்கொள்ளை (அரண்யகுளுத்தம்) துணியில் கட்டிச்சாணிப் பாலில் வேகவைத்துத் தோல்களைந்து காயவைத்துப் பொடித்துக்க ண்ணில் போடவும். திரிகடு கடுக்காய் (635) ஆதியானகிழி ஒத் தடம் கொடுக்கவும். ஒருபலம் கடம்கடேரியை 16 பலம் ஜலத்தில் கஷாயம்வைத்து இரண்டுபலமாகச்சுண்டின பிறகு தேன் கலந்து தாரைசெய்யவும். இது திரிதோஷங்கள் தனித்தனியாகவும் சேர்ந் தும்வரும் வியாதிகளைத் தீர்க்கும்.

கோரைக்கிழங்கு, மரமஞ்சள் இவை கஷாயம்செய்து தாரை செய்யவும். முருங்கை இலைரஸத்தில் தேன்சேர்த்துத்தாரைசெய்ய வும் வாதாபிஷ்யந்தம் தீரும். இளம் ஆமணக்குவேரை ஆட்டின் பாலில் வேகவைத்து அந்த பாலைத்தாரைசெய்யவும். நெல்பொரி பொடிசெய்து துணியில்கட்டி வேதுபிடிக்கவும். இவை வாதாபிஷ்



யந்தத்தைப்போக்கும். மஞ்சிஷ்டாரஜன்யாதி (636) கஷாயமும், கசேருயஷ்டியாஹ்வாதி (637) கஷாயமும், புண்ட்ரயஷ்டீநிசாதியும் (638) ச்வேதலோத்திராதியும் (639) ஸுமன:க்ஷாராதியும்(640)பித்த ரக்தாபிஷ்யந்தத்திற்குத் தாரைசெய்ய உபயோகமுள்ளவை. இந்தக் கஷாயங்கள் இனிமேல் சொல்லப்படும். ஸுமன:க்ஷாராதி (640) கபஸ்யந்தத்திற்கு மிகவும் நல்லது. பிரபௌண்டரீகயஷ்டியாஹ் வாதியான (642) சூர்ணம் குளிகை உபயோகிக்க எல்லா அபிஷ்யந்த மும் தீரும். சூடு உறுத்தல் வலிமுதலியன தீரும். தாம்பிரத்தின் மேல் எலுமிச்சம்பழரஸத்தால் சோழி அரைத்துப்போட செங்கண் தீரும். தாம்பிரத்தில் சங்கைத்தேனால் அரைத்துப்போடவும். செங்கண் தீரும். உறிக்கொடி இலையை அரைத்து நெல் கனத்திற்கு உள்ளங்கையில் தடவி ஐந்துநாழிகைநேரம் அதையே பார்த்துக் கொண்டிருக்கக் கண் நன்றாகத்தெரியும்.

634. கடுக்காய், இந்துப்பு, மாக்ஷிகம், காவிமண், இவையை சுத்தஜலத்தில் அரைத்துக் குளிகைசெய்து கண்ணுக்கு மேல்போட எல்லாதோஷமும் தீரும்.

635. திரிகடு, கடுக்காய், துத்தம், அதிமதுரம், லோத்திப் பட்டை, இவை அரைத்துத்துணியில் கிழிகட்டித் தாம்பிர பாத் திரத்தில் காடியில் நனைத்து வேது பிடிக்கவும்.

636. மஞ்சிஷ்டாரஜனி ஆதி—மஞ்சிஷ்டி, மஞ்சள், அரக்கு, திராக்ஷை, ருத்தி, அதிமதுரம், செங்கழுநீர்கிழங்கு, இவை கஷாயம் வைத்து ஜீனிசர்க்கரை சேர்த்துத்தாரைசெய்யவும். ரக்தபித்த வியாதிகள் தீரும்.

637. கசேருயஷ்டியாஹ்வாதி—கோரைக்கிழங்கு, அதிமது ரம், இவைகளை அரைத்துப்பொடிசெய்து ஒரு துணியில் கட்டி சுத்தஜலத்தில் போட்டிருந்து அந்த ஜலத்தை எடுத்து தாரைசெய்ய வும். ரக்தபித்தரோகங்கள் தீரும்.

638. புண்டரயஷ்டீநிசாதி—புண்டரீகக்கரும்பு, அதிமதுரம், மஞ்சள், ஜீனி, இவைகளைத்துணியில் கட்டி முலைப்பால் அல்லது

ஆட்டுப்பாலில் நனைத்து கண்ணுக்குப்பிழியவும். சூடு, வலி, சிகப்பு ஜலம்வருவது தீரும்.

639! ச்வேதலோத்திராதி——வெள்ளை லோத்திரப்பட்டை, அதிமதுரம், இவைகளைப்பொடிசெய்து துணியில் கட்டித்தாய்ப்பாலில் நனைத்து கண்ணில்பிழியவும். ரக்தபித்தாபிஷ்யந்தம் தீரும்.

640. ஸூபனக்ஷாராதி—ஜாதி அரும்பு, சங்கு, திரிபலை, அதிமதுரம், குருந்தொட்டிவேர், இவைகளைச்சுத்தஜலத்தில்குளிகைசெய்துபோட பித்தரக்தம் தீரும்.

641. இந்துப்பு, திரிபலை, சுக்கு, திப்பிலி, சங்கு, கஸ்தூரி, கடல்நுரை, காவிக்கல், குங்கிலியம், இவைகளைக் குளிகைசெய்துபோட கபலம்பந்தமான கண்வியாதி தீரும்.

642. பிரபௌண்டரீக யஷ்டியாஹ்வாதி—புண்டரீகக் கரும்பு, அதிமதுரம், மாமஞ்சள், இவை கஷாயஞ்செய்து புஷ்பாஞ்சனம் பலம் 10 மிளகு தோலா 1 இவைசேர்த்துப் பொடியாகவாவது குளிகையாகவாவது செய்து கண்ணில்போட எல்லா அபிஷ்யந்தமும் அதனால் எற்பட்ட சூடும், தீரும். இதற்குப்பாசுபதகுளிகை எனப்பெயர்.

பதினெட்டுவிதபில்ல ரோகங்களுக்குச் சிகித்ஸைசெய்யும் பொழுது ஸ்வேதம் வமனம் விரேசனம் உரைப்பது முதலியன மிகவும் குணம்தரும். கடுக்காய் கஷாயத்தில் தகரவிதையை அரைத்துப்போட பில்லம் தீரும். எண்ணையுடன் தேவதாரு பில்லங்களுக்கு நல்லது. தூத்தகஸ்யபலாதியும், கரஞ்ச பீஜஸ்வரஸாதிக்குழம்பும், ரஸாஞ்சனம் ஸர்ஜரஸாதியும், ஸைந்தவம் திரிபலாதியும், புஷ்பகாஸீஸமாதியும், க்ஷீரேணயஷ்டிமதுராதி கஷாய தாரையும், நவநீதாதியும், தாளபர்படாதியும், மரிசம்மலணுதியும் மரிசாமலகாதியும், நக்தமாலபலாதியும், உபயோகிக்கக் கண்ணுக்குத்தெளிவும் பார்வையும் சுத்தியும் உண்டுபண்ணும்.

643. தூத்தகஸ்யபலாதி—தூத்தம் ஒருபலம், முருங்கைவிதை இருபது, காடி முப்பதுபலம், இவைகளை அரைத்துத்தாம் பிரப்



பாத்திரத்தில் வைத்துத்தாரைசெய்ய அதிகநாளான பில்லங்களும் கடைக்கண் அரிப்பும் நீர் முதலியனவும் தீரும்.

644. கரஞ்சபீஜஸ்வரஸாதி—புங்கம்விதை, ஜாதி அரும்பு, இவை கஷாயம்வைத்து ரஸக்கிரியை செய்துபோட பில்லம் தீரும். இமைகளில் மயிர்முளைக்கும்.

645. ரஸாஞ்சனம் ஸர்ஜரஸாதி—ரஸாஞ்சனம், குங்கிலியம், ஜாதிப்பூ, மனோசிலை, கடல்நுரை, இந்துப்பு, காவிமண், மிளகு, அஞ்சனக்கல், இவைகளைத்தேனில் அரைத்துப்போட கொதறல், அரிப்பு, முதலியன தீரும்.

646. சைந்தவம் திரிபலாதி—இந்துப்பு, திரிபலை, திப்பிலி, கடுகரோகணி, சங்கு, கஸ்தூரி, தாம்பிரத்தூள், குளிகைசெய்துபோட பில்லம், சுக்ரம், தீரும்.

647. புஷ்பகாஸீஸாதி—அன்னபேதி சூர்ணத்தைத் துளசிரஸத்தால் தாம்பிரபாத்திரத்தில் பத்துநாள் பாவனைசெய்துபோட பில்லம் இமை நோய் முதலியன தீரும்.

648. க்ஷீரேணயஷ்டிமதுகாதி — அதிமதூரம் கஷாயம்செய்து சர்க்கரை பால் சேர்த்துத்தாரைசெய்ய எல்லா வியாதியும் தீரும்.

649. நவநீதாதி—தகரைவேரை வெங்கலப் பாத்திரத்தில் வெண்ணையால் அரைத்துப்போட்டுக்கிளரி கண்களில் போட உரையும்பொழுது வரும் ஜலம் நிற்கும்.

650. தாளபர்படாதி—பனைமட்டைரஸம், பர்படகஷாயம், கொஞ்சம் பச்சைக்கர்ப்பூரம் சேர்த்துத்தாரைசெய்ய எல்லாவியாதியும் தீரும்.

651. மரிசம்லவணாதி—(விமலகுளிகை) மிளகு, இந்துப்பு, வசம்பு, வாய்விளங்கம், திரிபலை, இரும்புப்பொடி, அஞ்சனக்கல், சேர்த்துக் குளிகைசெய்து போட திமிரம் தீரும்.

652. மரிசாமலகாதி— மிளகு தோலா 1, நெல்லிக்காய் தோலா 2, புங்கம்விதை தோலா 3 இவைகளை எலுமிச்சரஸம், கருசலாங் கண்ணிரஸம் இவைகளால் அரைத்துப்போட படலம், அரிப்பு, குத்துவலி, அர்புதம், முதலியன தீரும்.

653. நக்தமாலபலாதி—புங்கம் விதையை நெல்லிக்காய்ரஸம், ஜாதிப்பூரஸம், இவைகளால் அரைத்துப்போட கருடன்போல் கண் பிரகாசமுண்டாகும்.

654. ஸூர்யபிரபை—சந்தனம், இந்துப்பு, லோத்திப்பட்டை அரிதாரம், மனோசிலை, இவைகளைக் குளிகைசெய்து போட எல்லா கண்வியாதியும் தீரும்.

655. சங்காதி— சங்கு, கிழங்குமஞ்சள், கடுக்காய், சுக்கு, இவைகளைச் சமயிடை எடுத்துச் சுத்தஜலத்தில் அரைத்துக்குளிகை செய்துபோட கண்வியாதி தீரும்.

656. சங்கு, கடல்நுரை, இவைகளை ஆட்டுமூத்திரத்தில் அரைத்துக் குளிகைசெய்துபோட நூறுவருஷத்துப்பூ கூட தீரும்.

பத்தியாபத்தியம்—பழையநெல், கோதுமை, வரகு, பாசிப்பயர், யவை, நெய், சாப்பிடவும். அடபதியன் இலை, ஜீவஷி, ஜாங்கலமாம்ஸம், மாதளம்பழம், இந்துப்பு, திராக்ஷை, ஓமம், சுத்தஜலம், திரிபலை, இவை நல்லது. சூரிய உதயம், உச்சம், அஸ்தமனம், வெய்யில், கிரஹணம், முதலியன பார்க்கக்கூடாது. குடை, செருப்பு, இல்லாமல் நடக்கக்கூடாது. அஜீரணம், அதிகச்சூடான ஆகாரம், வேகரோதம், இவை தள்ளுபடி. கால்வழியாக இரண்டு நாடிகள் தலைவரையிலும் முக்கியமாகச் செல்லுகிறபடியால் அவைகள் கண்களில் முக்கியமாக வியாபிக்கிறபடியால் காலில் செய்யும் அப்யஞ்சனம் முதலியவை அவை மூலமாக கண்களில் வியாபிக்கின்றன. காலை சதாரக்ஷிக்கவும்.

நயனரோக சிகித்ஸை முற்றிற்று.



## கர்ணரோக நிதானம்.

**குறிப்பு**:—கர்ணரோகங்கள் மொத்தம் 25 என அஷ்டாங்க ஹிருதயத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளாவன-(1) வாத சூலம் (2) பித்தசூலம் (3) கபசூலம் (4) ரக்தசூலம் (5) ஸந்நிபாத சூலம் (6) கர்ணநாதம் (7) பதிரம் (8) பிரதிநாஹம் (9) கண்டூசோபம் (10) பூதிகர்ணம் (11) கிருமிகர்ணம் (12) வித்ரதி (13) கர்ணார்சஸ் (14) கர்ணசோபம் (15) கர்ணார்புதம் (16) கூசிகர்ணம் (17) கர்ணபிப்பலி (18) விதாரீ (19) பாலீசோஷம் (20) தந்திரிகா (21) பரிபோடம் (22) உத்பாதம் (23) உன்மந்தம் அல்லது கில்விரம் (24) துக்கவர்தனம் (25) லேஹ்ஹீ அல்லது லேஹ்யம்: அஷ்டாங்கஹிருதயத்தையொட்டியே ஸஹஸ்ரயோகத்திலும் 25 கர்ண ரோகங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் இவற்றுள் சில நோய்களுக்கு ஸஹஸ்ரயோகத்தில் லக்ஷணங்கள் சொல்லப்படாமல் விடப்பட்டிருக்கின்றன. அவைகளின் லக்ஷணங்களை வேறு நூல்களில் காணலாம்.

இனி காதுகளைச்சேர்ந்த வியாதிகளின் நிதானம் சுருக்கமாகச்சொல்லப்படுகிறது. அடிக்கடி குளிர்ந்தஜலத்தில் ஸ்நானம்செய்வதாலும் பெரிதான வேட்டு முதலிய சத்தங்களைக் கேட்பதாலும், அடிக்கடி காதைநோண்டி சொரிந்து வருவதாலும் திரிதோஷங்கள் கோபத்தை அடைந்து சப்தவஹங்களான 97 ஸ்ரோதஸ்ஸுகளில் (நாடிகளில்) வியாபித்து காதில் வியாதியை உண்டுபண்ணுகின்றன. தலையின் பாதிபாகம், காது, இவைகளில் அதிகக்குத்துவலி, குளிர்ச்சி பக்கத்தில் தட்டினால் பொறுக்கமுடியாதவலி நாளடைவில் மெதுவாகப் பழுத்து சீ வெளிவருதல், இது வாதகர்ணசூல லக்ஷணம். வலியும், பழுத்தலும், ஏற்பட்டு மஞ்சள் ஜலம் வடியும். சுற்றிச்சிறிது சிறிதாகப் புண்வெடிக்கும். இது பித்தகர்ணசூல லக்ஷணம். நாள் சென்று பழுத்து வெள்ளை சீ வெளிவரும் இது கபகர்ணசூல லக்ஷணம். அடிபட்டு ஊமைக்காயம்பட்டு ரக்தம் கட்டி நாளடைவில் பித்தசூலம்போல் தெரியும். இது ரக்தசூல லக்ஷணம். அதிகவலி, ஜ்வரம், பலநிறமான சீ வெளிவருதல், காது கேட்காமல் போவது, இது ஸன்னிபாத கர்ணசூலலக்ஷணம். சப்தவஹங்களான

நாடிகளில் வாயுசேர்ந்து, அலறுகிறதுபோலவும், மூளுவதுபோலவும், சங்குபோலவும், சப்தங்கள் கேட்டால் கர்ணநாதம் எனப்பெயர். வாயு சிலேஷ்மத்துடன் சேர்ந்து உரத்தசப்தங்களும் கேட்காமல் போனால் பதிரம் எனப்பெயர். வாதத்தை முன்னிட்டு கர்ணஸ்ரோதஸ்ஸுக்களில் சிலேஷ்மம் சேர்ந்து வலியுடன் காதும் கேட்காமல் போனால் பிரதிநாஹம் எனப்பெயர். அதிகப்பிப்பு ஏற்பட்டால் கர்ணகண்டு எனப்பெயர். அதிகம்வீங்கி வலியும் ஏற்பட்டால் கர்ணசோபம் எனப்பெயர். பித்தத்தினால் பழுத்து சூட்டுடன் துர்நாற்றமான கட்டியான சீ வந்தால் பூதிகர்ணம் எனப்பெயர். வாதாதிகள் காதிற்குள் சென்று உள்சதையைக்குதற அடித்து கிருமிகள் உண்டானால் கிருமிகர்ணம் எனப்பெயர். பிப்புடன் சிவக்கும் சேர்த்தால் கர்ணவித்ரதி எனப்பெயர். செடி சிரங்கே காதிற்குள் அதிகவலியுடன் கிளம்பினால் கர்ணார்சஸ் எனப்பெயர். அதிக வலியுடன் சீ ஒழுகிக்கொண்டு காதுகேட்காமல் துர்நாற்றமும் கண்டால் கர்ணார்புதம் எனப்பெயர். பிப்பலீ, கூசிகர்ணம், விதாரீ, கர்ணசஷ்குலீ என நான்கு வியாதிகளும் காணப்படாததினால் லக்ஷணம் சொல்லப்படவில்லை. (வியாதியின் லக்ஷணம் அதன்பேரினாலே விளங்கும்) வாதம் நாடிகளின் உள்சென்று காதுவளையத்தை கனம் குறையும்படி (சூம்பும்படி) செய்தால் பாளிசோஷம் எனப்பெயர். சுருங்கி கெட்டியாகக் காதுவளையம் இருந்தால் தந்திரிகா எனப்பெயர். காதகுத்தி (பெரிய ஆபரணங்கள் போட்டுக் கொள்ளுவதற்காக) வளர்க்கும்பொழுது திடீரென்று சூடு, வீக்கம், வலி, உண்டானால் பரிபோடம் எனப்பெயர். உத்பாதம் என ஒன்றுமுண்டு. அனுபவத்தில் பார்க்காததால் லக்ஷணம் எழுதப்படவில்லை. காதில் ஆபரணம்போட்டுக்கொள்வதால், சுற்றிலும்புண், சிறுவெடிப்பு, வீக்கம், சூடு, முதலியன கண்டால் கல்லீரம் எனப்பெயர். இது ஸன்னிபாதத்தால் வந்தால் பாளீச்வயது எனப்பெயர். கபத்தால் அரிப்புடன் மிகவும் சிறியகிருமிகள் உண்டானால் லேஹ்யம் (லிஹ்யமெனச் சிலர்) எனப்பெயர். இவ்விதம் இருபத்திஐந்து காது வியாதிகளில் பிப்பிலீ கூசிகர்ணம், விதாரீ, ஸன்னிபாதசூலை இந்நான்கும் அஸாத்யம். தந்திரிகையாப்யம். பாக்கி இருபதும் நன்றாகவைத்தியம் செய்தால் சுகப்படும்.



## கர்ணரோக சிகித்சை.

வாதசூலைக்கு ரஸோநம்ரவிபத்ரேண என்ற மருந்தும் (657). உள்ளிகாயம் என்ற மருந்தும் (658) காதில் பூரணம் செய்ய உதவும். அரசு, எருக்கு, பில்வம், இவையின் இலையை வாட்டிப் பிழிந்தரஸத்தை இளம் சூட்டுடன் காதில்நிறுத்தவும். ராத்திரியில் பால் ஆவியால் காதுக்கு வியர்வை பிடிக்கவும். இரவு படுக்கும்பொழுது வாதஹரங்களான திரவியங்களால் செய்யப்பட்ட நெய்களைச் சாப்பிடவும். (கழுத்துக்குமேல்பட்ட வியாதிகளுக்கு இரவு ஆகாரத்திற்குமேல் மருந்து சாப்பிட்டால் சீக்கிரம் பிடிக்கும்) காதுவலியுடன் சீவரும் வியாதிகளுக்கு மஹத: பஞ்சமூலஸ்யேத்யாதி (659) தைலத்தால் பூரணம் செய்யவும். குழந்தைகளுக்குக் காரணமில்லாமல் திடீரென்று காதில் சீவந்தால் வயதான பிலாமரத்துக் காயின் உள்ளிருக்கும் நடுத்தண்டைக் (அதாவது பிலாச்சுளைகளுக்கு ஆதாரமாக நடுவில் நீளமாக இருக்கும் தண்டு) தின்று காதில் ஊதவும். கர்ணரோகிகளுக்கு நாகராதி (305) திரிபலாதி (303) அஸனபில்வாதி (304) பிருங்காமலகாதி (308) தைலங்கள் நல்லது. தலையை ஜலத்தில் நனைக்கக்கூடாது. பச்சை ஜலம் குடிக்கக்கூடாது. பித்த கர்ணசூலைக்குப் பூரணத்திற்கு ஜீவந்த்யாதி (222) விதார்யாதி, சிறு பஞ்சமூலத்தால், தயார்செய்த நெய் நல்லது. இந்த நெய்களை எல்லாம் திராக்ஷைப்பழம் நிறையச் சேர்த்துத் தயார்செய்யவும். அதிமதுரம் கல்கம் சேர்த்து வடித்த நெய், அதிமதுரக் கஷாயம் சீதத்திரவியங்கள் கல்கம் சேர்த்து வடித்தநெய், ஆகிய இவைகளால் பூரணம் செய்யவும். திராக்ஷை, அதிமதுரம், இவைகளைப்போட்டுக் காய்ச்சின தாய்ப்பாலால் காதில் பூரணம் செய்யவும். இவை பித்தசூலத்திற்கு நல்லது. கபசூலைக்கு தூபம், கண்டூஷம், நஸ்யம், முதலியன செய்யவும். உஷ்ணதிரவியங்களால் கர்ணபூரணம் செய்யவும். உள்ளி, இஞ்சி, முருங்கை வேர், புனர்முருங்கைவேர், கதளிவாழை, (கதளிவாழை என்பது மலையாளத்தில் கிடைக்கும் ஒரு விசேஷமான வாழைஜாதி) இவை ரஸத்தைக் காதில்விடவும். எருக்கு மொக்குகளைக் கல்லில் நசுக்காமல் எண்ணெயில் தோய்த்துப் பிழிந்து மண்பொதிந்து சுட்டுப்

பிழிந்து எடுத்த ரஸம் கபசூலத்திற்கு நல்லது. மூங்கில்பொரியும், ஆட்டு மூத்திரமும், சேர்த்துக்காய்ச்சின எண்ணெயைக் காதில் நிறுத்த ச்லேஷ்மசூலம் தீரும். ரக்த சூலத்திற்குப் பித்த சூலத்திற்குச் சொன்னமாதிரி செய்யவும். ஸன்னிபாத சூலத்திற்கு முன் சொன்னவைகளைக்கலந்து யுக்திப்படி செய்யவும். நார்த்தம் தழைபோட்டுக் காய்ச்சின எண்ணெயும், பிரம்புத்துளிர்போட்டுக்காய்ச்சின எண்ணெயும், ஸன்னிபாதசூலத்திற்கு நல்லது. காதில் புண்ணுக்கு ந்யக்ரோதாதி கணத்தாலும், ஸுரஸாதி கணத்தாலும் (662) கஷாயம்செய்து நிறுத்தவும். இவைகளால் நஸ்யமும் செய்யவும். பாதிர்யம், கர்ணநாதம், இவைகளுக்கு வாதசூலைக்குப்போல் செய்யவும். சிறுகடுகெண்ணெயை வாதஹரத்ரவியங்கள் சேர்த்துக் காய்ச்சிக் காதில் நிறுத்தவும். கர்ணநாதம் தீரும். கண்டு, பாதிர்யம், கிருமி, பூதிகர்ணம், முதலியவற்றிற்கு சுஷ்கமூலக சுண்டியாதிக்ஷாரதைலம் போட தீரும். முகம் பல் முதலிய வியாதிகளுக்கும் இது விசேஷகுணம் கொடுக்கும், கர்ணவித்ரதிக்கு வித்ரதிசிகித்ஸையும் செய்யவும். விதாரிகா, அர்புதம், அர்சஸ், இவைகளுக்குச் சிகித்ஸை செய்யும்பொழுது முதலில் தேத்தாங் கொட்டையை அரைத்துப்போட்டு அழுக்கைப்போக்கிச் செய்யவும். பாலிசோஷத்திற்குப் பன்றிநெய் போடவும். அரக்கு, அழுக்கராக்கிழங்கு, மெழுகு, முதலியவற்றைப் பன்றிநெய்யில் கலந்து குழம்பாக்கித் தேய்க்க பாலிசோஷம் தீரும். நெரிஞ்சாம்புளி வேரைத் தேங்காய் எண்ணெயில் அரைத்துத் தேய்த்தால் காது வளையத்தில் உள்ள புண்கள் தீரும். நடுவில் கீறி தோஷத்தை எடுத்துப் புண்ணை ஆற வைக்கவும். ஜலசூகஸ்வயம் குப்தாதி நெய் காது வளர நல்லது. பூமீகதம்பஸ்வரசேத்யாதியும் நல்லது. நவநீதவசாதியும் நல்லது. இதை மூலைபெருக்க மார்பில் தேய்க்கலாம். எறும்பு, மூட்டை, ஈசல், சிதள், முதலியன காதில் நுழைந்தால் கல்லுப்புபோட்டு வென்னீர் காயவைத்துச் சூடாகவிடவும். அவை செத்துப்போய் வெளிவரும்.

(657) ரஸோனம் ரவிபத்ரேணாதி—உள்ளிப்பூண்டை எருக்கிலையில் பொதிந்து மண்பொதிந்து சுட்டு அதன் ரஸத்தைக் காதில் விடவும். கர்ணசூலம் தீரும்.



(658) உள்ளிகாயமித்யாதி— உள்ளி, காயம், இவைகளை அரைத்து எருக்கிலையில் தடவி வாட்டிப் பிழிந்து எடுத்து ரஸம் விடவும்.

(659) மஹத: பஞ்சமூலஸ்யேத்யாதி— மஹாபஞ்சமூலத்தில் வெண்பட்டுசுற்றி எண்ணெயில் நனைத்துச்சுடல் தைலம் எடுத்துப்போட வலி முதலியன தீரும். இவ்விதம் தேவதாரத்திலும் செய்யலாம்.

(660) அர்க்கபல்லவாதி— எருக்கம்துளிரை எண்ணெயில் நனைத்து இந்துப்பும், புளியும், சேர்த்து அரைத்து கள்ளிமரத்தின் உள்வைத்து, கள்ளி இலையால் பொதிந்து புடபாகம் செய்து எடுத்த ரஸம் விடவும், சூலை தீரும்.

(661) ரஸோனபீஜ பூரஸ்யேத்யாதி— மாதளை நாரங்காய் ரஸம், விளாம்ரஸம் இவைகளைக் காதில்விட சீ தீரும்.

(662) ஸுரஸாதிகணம்—துளசி, கருந்துளசி, மணிக்கஞ்சகம், கருங்கஞ்சகம், வாய்விளங்கம், நாயுருவி, எலிக்காதுத்தழை, கூம்பில், பொன்னாவரை, கருந்தும்பை, காரிங்கை, சிறுதேக்கு, கருக்குந்தி, முல்லை, கருந்தாளி, கொட்டைக்கரந்தை, காட்டப்பை, நொங்கணம்புல், மாம்லி—கபம் மேதஸ்கிருமி பீனஸம் முதலியன தீரும்.

# கர்ணரோக சிகித்ஸை முற்றிற்று.

## நாஸாரோக நிதானம்.

**குறிப்பு**:—நாஸாரோகங்கள் என்பது மூக்குகளில்வரும் நோய்களைக் குறிக்கும். அவை 18 விதங்களாக அஷ்டாங்கஹ்ருதயத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன—(1) வாதபீநசம் (2) பித்தபீநசம் (3) கபபீநசம் (4) ஸந்நிபாதபீநசம் (5) ரக்தபீநசம் (6) துஷ்டபீநசம் (7) பிருசம் க்ஷவம் (8) நாஸாசோஷம் (9) ஆநாஹம் (10) நாஸாபாகம் (11) நாஸாஸ்ராவம் (12) அபீனஸம் (13) தீப்தி (14) பூதிநாஸா (15) பூயரக்தம் (16) புடகம் (17) நாஸாஅர்சஸ் (18) நாஸாஅர்

புதம். ஸஹஸ்ரயோகத்தில் இம்முறையே பின்பற்றப்பட்டிருக்கிறது. ஆனால் சில பேதங்கள் விடப்பட்டிருக்கின்றன.

அதிகப்பனி, புழுதி, காற்று, இவைதாக்குவதாலும், அதிகத்தூக்கம், தலையை அதிகம் உயர்த்தியும் தாழ்த்தியும்வைத்து நித்திரைசெய்வது. இரவில் தூக்கம் விழிப்பது, வெவ்வேறு ஜலத்தில் ஸ்நானம் செய்வது, மலமூத்திரம் அடக்குவது, இது முதலிய அபத்யங்களால் திரிதோஷங்கள் கோபித்து மூக்கை அதிகம் கனக்கச்செய்து பலவியாதிகளை உண்டுபண்ணுகின்றன. வாதகோபத்தினால் முகத்திற்கு வரக்ஷி, தும்மல், அதிகம் மூக்கு அடைப்பது, தலை நெற்றிக்கட்டு குத்துவலி, தணுத்தஜலம் வருதல் ஆகிய இவை வாதபீநஸ லக்ஷணம். தீர்த்தாகத்துடன் பித்தத்தினால் சிறுசிரங்குகள் உண்டாகும். அவை வரண்டு சிவந்து சூடான ஜலம் வரும். கபமும் வரும். இது பித்தபீநஸ லக்ஷணம். கபகோபத்தால் அன்னத்வேஷம், தலைபாரம், உடம்புகனம், வாந்தி, வாய்தித்திப்பு, மூக்குபிப்பு, வழவழப்பான ஜலம் வெளிவரும், கபமும் அதிகம்வரும். இது கபபீநஸ லக்ஷணம். எல்லா தோஷங்களும் கோபத்தை அடைந்தால் எல்லா லக்ஷணங்களும் சேர்ந்து காணப்படும். இது ஸன்னிபாத பீநஸம். ரக்தம் கோபித்து மூக்கு நாடிகளில் சென்று கண் சிகப்பாகவும், மார்பில்தரிப்பும், இந்திரியங்கள் எல்லாவற்றிலும் சூடும், சுவாசம் காசம், வாய்வறண்டுபோவது, அன்லைவலி, மூச்சு நாற்றம், நாக்குருசி தெரியாமை, மூக்குக்கு மணம்தெரியாமை, இவை ரக்தபீநஸலக்ஷணம். உபேக்ஷைசெய்தால் இவைசௌகரியப்படாது. எரிப்பு அதிகம் தீக்ஷண திரவியங்களை முகர்ந்து பார்ப்பது, குச்சி, இடுக்கி முதலியனபட்டு மூக்கு எலும்பு முறிந்துபோவது, அதிகம் வெய்யிலில்படுவது, முதலியவைகளால் வாயு பிரகோபம் அடைந்து நான்கு (சிருங்காடம்) மர்ம ஸ்தானங்களில் ஒன்றுசேர்ந்து காது, நாக்கு, கண், மூக்கு, இவைகளின் துவாரங்களில் இருந்துகொண்டு அடிக்கடி தும்மலை உண்டுபண்ணும். இது பிருசம்க்ஷவம். வாயு, மூக்கு ஸ்ரோதஸ்ஸில் இருக்கும் கபத்தை சோஷிக்கச்செய்து மூக்கை அடைத்துக்கொள்ளும். இதை நாஸிகாசோஷம் என்பர். மூக்கு வீங்கிவந்தால் ஆநாஹம் எனப்பெயர். பித்தத்தால் மூக்கு பழுத்



தால் நாஸாபாகம் எனப்பெயர். மூக்கிலிருந்து ஜலம் ஒழுகிக்கொண்டிருந்தால் நாஸாஸ்ராவம் எனப்பெயர். கபத்தின் வழி அடைபட்டு கறுப்பான சிரங்குகளும், தலைபாரம், இருமல், வலி, இவைகளும் ஏற்பட்டு, வெள்ளாட்டு மூக்குச்சளிபோல் வந்தால் அபீனஸம் எனப்பெயர். ரக்தகோபத்தால் கறுப்பான நுரை உண்டாகும். தொடமுடியாமல் வலிக்கும், இது தீப்தி. அடிநாக்கு, மூக்கு மாம்ஸம் இவை கெட்டு மூச்சு துர்நாற்றத்துடன் இருந்தால், பூதிநாஸம் எனப்பெயர். அடி முதலியவற்றால் திரிதோஷங்கள் கோபத்தை அடைந்து அதிகம் மண்டைக்குத்துடன் மூக்குவழியாக ரக்தம், சீ இவை வந்தால் பூயரக்தம் எனப்பெயர். பித்தசிலேஷ்மங்கள் உள்ளில் நிறைந்து வாயு கபத்தை வளரச்செய்து மூக்கடைத்துக்கொண்டுஉள்பக்கம் புண்உண்டாகும் இதுபுடகம். சிவந்து செம்பரத்திப்பூபோல் ஆகும், இது அர்புதம். அர்சஸ்ஸுபோல் ஏற்பட்டால் நாஸார்சஸ் எனப்பெயர் இவ்விதம் மூக்கில் பதினெட்டு வியாதிகள் ஏற்படுகின்றன. இவைகளுக்கு இனிமேல் சிகித்ஸை சொல்லப்படுகிறது.

பீனஸம் முழுவதும் யாப்யம் தான். நிதானத்தை வர்ஜிப்பதுதான் முக்கியமான சிகித்ஸை. தலைக்குத் திரிபலாதி தைலம், பிருங்காமலகாதி, அஸனவில்வாதி, சந்தனாதி, நாகராதி, முதலியன நல்லது. இந்தத் தைலங்களால் கண்டூஷம், நஸ்யம், செய்வதும் நல்லது. அதிமதுரம், திரிகடு, திரிபலை, இவை எழும் பொடித்து கர்ப்பூரம்சேர்த்து உச்சியில் போட்டு காற்றுபடாமல் குல்லாவைத்துக்கட்டவும். லகுவாயும் புளிப்பாயும் எண்ணைப் பசையுள்ளதாயும் இருக்கும் அன்னத்தைக் கட்டியாக உருட்டிக்கொண்டு கொஞ்சமாகச் சாப்பிடவேண்டும். பச்சைஜலம் சாப்பிடக்கூடாது. ஜாங்கல மாம்ஸங்கள், ஆலம்விழுது, பாசிப்பயர், சர்க்கரை, திரிகடு, கோதுமை, மாதளம்பழம், தேன், பழையகள்ளு, முருங்கை ரஸம், தசமூல கஷாயம் இவைகள் பீனஸவியாதியுள்ளவர்களுக்கு குணம் தரக்கூடியவை. வாத பீனஸத்தில் வியோஷாதிவடகம் (663) விதார்யாதிகண கஷாயத்தால் நஸ்யம், கண்டூஷம், எல்லாம் குணம் தரக்கூடியவை. பித்தபீனஸத்தில், மதுர சீதளமான வஸ்துக்களை உபயோகிக்கவும். த்வக்திரிபலாதி (664) தைலத்தால் நஸ்

யம் செய்யவும். கபபீனஸத்தில், லங்கனம், வமனம், வெள்ளைக் கடுகு அரைத்துத் தலையில் தேய்க்கவும். திரிகடு பொடித்து நஸ்யம் செய்யவும். வியோஷாருஷ்கருமிஜிதாதி (665) புகையும் குணம் கொடுக்கும். தீக்ஷ்ணங்களான சூர்ணம் நஸ்யம், தூமம் முதலியனபிரசஸ்தவம், முதலியவைகளில் குணம்கொடுக்கும். சுண்டீகுஷ்டாதி (666) தைலத்தால் நஸ்யம் இந்த நெய்யாலும் நஸ்யம் செய்யவும். நாஸாசோஷத்தில் பலாதைலம் தேய்த்தப் புகைபிடிக்கவும். இதையே நஸ்யம்செய்யவும் ஸ்நிக்தமாகச்செய்து ஸ்வேதம் செய்ய ஆநாஹம் தீரும். பாகம் விதக்தம் இவையில் பித்தசிகித்ஸை செய்யவும். தீக்ஷ்ணங்களான நஸ்யம் முதலியதால் நாஸாஸ்ராவத்தைப்போக்கவும். பூதிநாஸத்தில் கபஹரமான சிகித்ஸை செய்யவும். சுக்குஸிம்ஹியாதி (667) தைலத்தால் நஸ்யம் செய்யவும். பூயரக்தத்திற்கும் கூடியமட்டில் பித்தசிகித்ஸை நல்லது. அர்சஸ், விக்ரதி, அர்புதம் இம்மூன்றிலும் புராப்பட்டை (இது ஒருமரம்) மஞ்சள் அதிமதுரம், கடுக்காய், இரும்பு, காரியம், செம்பு, இவைகளை குளிகைசெய்து தேன் சேர்த்து அரைத்து மூக்கில் தேய்க்கவும். இதனால் குணப்படாவிடில் சஸ்திரம் காய்ச்சிச் சுடவும். நிகும்பகும்பாதிவர்த்தி (668) யும் நல்லது.

(663) வியோஷாதி வடகம்- திரிகடு,தாளீசபத்திரி, செவ்வியம், நெரிஞ்சாம்புளி, அம்லவேதஸம், கொடிவேலி, ஓமம், இவை வகைக்கு இரண்டு பலம், ஏலரிசி, லவங்கப்பட்டை, பச்சிலை, இவை வகைக்கு அரைப்பலம், சீனிபலம் 50, இதைவடகம்செய்து சாப்பிட பீனஸங்களுக்குநல்லது.

(664) தவக்வத்திரிபலாதி—தவம்— (ஞமை—எனமலையாளம்) லவங்கப்பட்டை, திரிபலை, விருத்ததாரகம்,குமிழ், அதிமதுரம், வில்வம், இவை அரைத்துக் கலக்கி பத்துபங்கு பால் சேர்த்து அதில் ஒரு பங்கு எண்ணை கலந்து வடித்து நஸ்யம் செய்யவும்.

(665) வியோஷாரு பூகக்ருமிஜிதாதி— திருகடி, ஆமணக்கு, வாயுவிளங்கம், தேவதாரம், அரேணுகம், கோஷ்டம், இங்குதிவிதை, கண்டங்கத்திரிவிதை, சிவதை, கடுகு, பீனாி, முன்னைப்பூ,



ஊகவிதை (பீலு) முருங்கைவிதை, இவை சமமெடுத்து யானைமூத்திரம், குதிரை மலத்தின் ரஸம், குதிரை மூத்திரம், இவைகளால் அரைத்து உலர்த்திப்புகை பிடிக்கவும்.

(666) சுண்டீகுஷ்டாதி—சுக்கு, கோஷ்டம், திப்பிலி, வாய்விளங்கம், திராக்ஷை, இவைகளின் கஷாயத்தாலும், கல்கத்தாலும், நெய் அல்லது எண்ணை வடித்து நஸ்யம் செய்யவும்.

(667) சிக்ருஸிம்ஹீ ஆதி—முருங்கைவிதை, கண்டங்கத்திரி விதை, நாகதந்திவிதை, (வாளம் சேர்க்கலாம்) திரிகடு, இந்துப்பு, வாய்விளங்கம், துளஸிக்கதிர், இவைகளை அரைத்துக் குழப்பி எண்ணை வடித்து நஸ்யம்செய்யவும்.

(668) நிகும்பகும்பாதி— நாகதந்தி (அல்லது வாளம்) சிவதை, இந்துப்பு, மனோசிலை, சமுத்திர உப்பு, கொடிவேலி இவை கல்கத்திரன், நெய் கலந்து புகைபிடிக்கவும். வர்த்தியும் உபயோகிக்கலாம்.

# நாஸாரோக சிகித்ஸை முற்றிற்று.

## ஓஷ்டரோக நிதானம்.

மத்ஸ்யம், பன்றிமாம்ஸம், உளுத்தம்பருப்பு, இவைசாப்பிடுவது இதோடு கூடவோ இல்லாமலோ தயிர், பால், மத்யம், கரும்புச்சார் முதலியன சாப்பிடுவது, பல் தேய்க்காமல் இருப்பது, அதிகம் தூங்குவது, விரேசனம், ஸிராவேதம், வமனம், கண்டுஷம், இவை விதிப்படி செய்யாமல் இருப்பது, இவைகளால் திரிதோஷங்கள் கோபித்து முகரோகங்களை உண்டுபண்ணுகின்றன. இந்த முக வியாதிகள் மொத்தம் எழுபத்திரண்டு. அவற்றின் விவரம்—ஓஷ்ட (உதடு) வியாதி பதினொன்று கண்ட (சன்னம்)த்தில் ஒன்று, எகிறில் பதின்மூன்று, நாக்கில் ஆறு, பல்லில் பத்து, அண்ணத்தில் எட்டு, தொண்டையில் பதினெட்டு, வாயில் எட்டு, இவ்விதம் மொத்தம் எழுபத்திரண்டு நோய்களுக்கும் முகரோகங்கள் எனப்பெயர். அவற்றுள் உதடு ரோகங்கள் 11, இவைகளின் லக்ஷணம். உதடு இரண்

டாகப் பிளந்து வந்தால் அது கண்டோஷ்டம் எனப்பெயர். சங்கு, கொம்பு, நாதசுரம், முகவீணை, முதலியன (ஊதுவதால்) வாசிப்பதாலும், அதிகம் தும்முதலாலும் வாயு கோபித்து இரண்டு உதடுகளும் புண்ணாகி வலியுடன் வீங்கி வறவறப்பாக சிறு மணல்மாதிரி சிறு சிரங்குகள் உண்டானால் அது ஓஷ்டபாகம் எனப்படும். நெருக்கமாக கடுகு கடுகாக வெடித்து உதடு ஒழுகினால் இது பித்தபாகம் எனப்படும். சிலேஷ்மத்தால் வெளுப்பாக வீங்கி கனமாக அனேகச் சிரங்குகள் உண்டானால் சிலேஷ்மபாகம் எனப்பெயர். பல நிறங்களாகப் பழுத்தும்பழுக்காமலும் பலசிரங்குகள் உதட்டில் உண்டாகி வறவறப்பாகஇருக்கும். இது ஸன்னிபாத பாகம். ரக்தத்தால் சிகப்பாக உதடு வீங்கி இலந்தைப்பழம்போல்ஆகும், ரக்தம்ஒழுகும், இது ரக்தபாகம். இதை உபேக்ஷித்தால் அது மூக்கில் அர்ப்புதமாகவரும். ரக்த பாகத்தில் ரக்தம் க்ஷயத்தை அடையும்பொழுது உதட்டில் அர்ப்புதம் ஆகும். இது ஓஷ்டார்ப்புதம்—மாம்ஸ தோஷத்தால் உதடு பருத்து பழுத்து கிருமி உண்டானால் மாம்ஸபாகம் எனப்பெயர். மேதஸ்ஸால் அதிகம் வீங்கி வலியுடன் பிருதுவாக ஏற்பட்டால் மேத: பாகம் எனப்பெயர். அடிபட்டு வீங்கி உதடு வெடித்தால் க்ஷத பாகம் எனப்பெயர். உதடு சிப்புண்டாய் வீங்கி கட்டியாய் நீர் கொப்பளம்போல் வந்தால் ஜலார்ப்புதம் எனப்பெயர். இவ்விதம் பதினோறு வியாதிகள் உண்டாகும். அவை கண்டோஷ்டம், ஓஷ்ட கோபம், பித்தபாகம், சிலேஷ்மபாகம், ஸன்னிபாதபாகம், ரக்தபாகம் அர்ப்புதம், மாம்ஸபாகம், மேதபாகம், க்ஷதபாகம்.

இவைகளின்சிகித்ஸை கண்டோஷ்டத்தை இருபக்கமும்புண் செய்து உரைத்து இரண்டையும் சேர்த்துத்தைத்துப் பிறகுவிரணசிகித்ஸை செய்யவும். தலைக்கு யஷ்டிஜோதிஷ்மத்யாதி தைலத்தால் தேய்க்கவும். வாதஹர தைலத்தாலும், மதுரஸ்கந்தத் தைலத்தாலும் நஸ்யம் செய்யவும். ஓஷ்டபாகத்திற்கு வாதஹரமான சிகித்ஸையும் மஹாஸ்நேஹத்தால் நனைத்த துணிபோடுவதும் நலம். குங்கிலியம், மெழுகு, தேவதாரு, நெல்லிக்காய், அதிமதுரம், குக்குலு, இவை பொடிசெய்துநெய்யில்குழைத்துத்தேய்க்கவும். புண்ணாக இருந்தால் கொட்டைமுந்திரித்துளிரைப் பாலில்வேகவைத்து ஒத்தடம்கொடுக்



குவேதுபிடித்து கண்ட ஓஷ்டத்திற்குபோல் தலைக்குத் தைலமும்நஸ்யமும் செய்யவும். பித்தபாகத்திற்கு அட்டை கடிக்கச்செய்து ரக்தம் களைந்து குங்கிலியம், அதிமதுரம், லோத்திரப்பட்டை, இவை அரைத்து தேனில் தடவவும் குளூசி, யஷ்டி, பத்தங்கங்களால் தயாரானதைலம் தேய்க்கவும். க்ஷதபாகம் ரக்தபாகம் இவைகளுக்கு பித்தபாகம்போலச்செய்யவும். சிலேஷ்மபாகத்திலும் முதலில் இந்தசிகித்ஸை செய்து பிறகு திரிகடு, யவக்ஷாரம், இவை தேனில் தேய்க்கவும். பிறகு கபஹரங்களான தூமம் கண்டுஷம் முதலியன செய்யவும். மேதப்பாகத்தை வேதுபிடித்து கனமாகச்சுடுவைத்து லோத்திரப்பட்டை திரிபலை, நாவல்பட்டை தேனில் அரைத்துத் தேய்க்கவும். இது ஸௌகரியமாகிறவரையிலும் தேய்க்கவும். ஜலார்ப்புதத்தை உடைத்து சுத்தப்செய்து தேன்கலந்து தீக்ஷ்ணங்களான மிளகு முதலியதால் தேய்க்கவும். கருக்காலும் குழிவிழுந்தாலும் க்ஷாராக்னிபிரயோகம் செய்யவும்.

குறிப்பு:—ஓஷ்டரோகங்கள் (உதட்டுநோய்கள்) 11 என்று அஷ்டாங்கஹிருதயத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன–(1) கண்டஓஷ்டம் (2) வாத ஓஷ்டம் (3) பித்த ஓஷ்டம் (4) கப ஓஷ்டம் (5) ரக்த ஓஷ்டம் (6) ஸன்னிபாத ஓஷ்டம் (7) அர்ப்புதம் (8) மாம்ஸ ஓஷ்டம் (9) மேதஸ் ஓஷ்டம் (10) க்ஷத ஓஷ்டம் (11) ஜலார்ப்புதம் இவற்றுள் சில பேதங்கள் ஸஹஸ்ரயோகத்தில் விடப்பட்டிருக்கின்றன அவற்றை அஷ்டாங்க ஹிருதயத்தில் காணலாம்.

## ஓஷ்டரோக சிகித்ஸை முற்றிற்று.

## கண்டரோகம்.

கண்டத்தில் கட்டியாகவும் சுண்டைபோல் சிறிதாகவும் வீக்கம் ஏற்பட்டு ஜ்வரம் குத்துவலி உண்டாய் பழுத்து சீவரும் சிறு கண் உண்டாய் புண் காயாமலும் இருக்கும். காலக்கிரமத்தில் அவ்விடம் குன்றுமணிபோல் கிளம்பி பெரிதாய் கோழியின் பூபோல் ஆகும். இதற்கு கண்டாலஜி கண்டார்சஸ், கண்டார்ப்புதம் என்றெல்லாம்

பெயர் சொல்லுவர். அதிகக் காலப்பழக்கம் ஏற்பட்டு ரத்தம் பெருகி துர்நாற்றம் உண்டானால் அது அஸாத்யம் எனக் கூறவேண்டும். கண்டரோகத்திற்குச் சிகித்ஸையில் முதலில் நீருக்கு சிகித்ஸைசெய்ய வேண்டும். உடைந்தால் புண்ணுக்குவேண்டிய சிகித்ஸை செய்ய வேண்டும். பால் ஆவி பிடிக்கவேண்டும். அதிமதுரம், வாலுளுவை யரிசி, லோத்திப்பட்டை, கொட்டைக்கரந்தை, நன்னாரி, நெய்தல், பேய்ப்புடல், பனைத்தக்காளி, இவைகளால் தயாரிக்கப்பட்ட தைலங்கள் அப்யங்கத்திற்கு நல்லது.

குறிப்பு:—தற்காலம் சொறிசிரங்கு முதலியவற்றிற்குப்பால் இஞ்சக்ஷன் செய்கின்றனர். நமது முன்னோர்கள் பாலின் ஸாராம்சங்களால் ரக்ததோஷங்களைப்போக்கிவந்தனர். பால்சேர்ந்த தைலங்கள் அநேக வைத்தியத்தில் அதிகம் கிடையாது எனச்சொல்லலாம். கண்டம் என்ற கன்னத்தில்வரும் வியாதி ஒன்று எனக்கூறப்பட்டிருக்கிறது.

## தந்தரோக நிதானம்.

குறிப்பு:—பற்களில் உண்டாகும் நோய் பத்துவிதங்களென அஷ்டாங்கஹ்ருதயத்தில் கூறப்பட்டிருக்கின்றது. அவையாவன—(1) நிஸ்தந்தம் (இதற்கு தாலனம் என்றும் மற்றொரு பெயர்) (2) தந்தஹர்ஷம் (3) தந்தபேதம் (4) சாலம் (5) கராளம் (6) அதிதந்தம் (7) பூதிதந்தம், சர்க்கரா என்றும் பெயர் (8) கபாலிகா (9) ச்யாவம் (10) பிரஹூனம் இதற்கு பூயரக்தம் என்றும் கிருமிதந்தமென்றும் வேறு இரண்டு பெயர்கள் உண்டு. இவ்விதம் அஷ்டாங்கஹ்ருதயத்தில் தந்தநோய்கள் பத்துவிதங்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் மற்ற நூல்களில் 12 விதங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது ஏற்கனவே சொன்ன பத்துவிதங்களுடன் (1) பஞ்ஜனகம் (2) ஹநுமோக்ஷம் என்ற இருவிதங்கள் சேர்த்து 12 பேதங்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

பற்கள் குளிர்ச்சியால் அதிக வேதனையும் உஷ்ணத்தால் சகத்தையும் அடைந்தால் அதற்கு சீததந்தம் எனப்பெயர். பற்களில்காற்று, புளிப்பு, குளிர்ச்சி, இவை படமுடியாமல்போனால் தந்தஹர்ஷம். பற்களில் வலி, தரிப்பு, விட்டுபோவதுபோல் தோன்றல்,



இவை இருந்தால் தந்தபேதம் எனப்பெயர். சாப்பிடும்பொழுது வலி, ஆட்டம், அதிகம் இருந்தால் தந்தசாலம் எனப்பெயர். பயங்கரமான பற்கள் முளைத்தால் கராளம் எனப்பெயர் (தத்திப்பல்). அதிகப்படியான பற்கள் ஏற்பட்டால் அதிதந்தம் எனப்பெயர். இதற்கு வர்தனமென மற்றொரு பெயர். பற்களை நன்றாகத் தேய்க்காமல் அவைகளில் அழுக்கு ஒன்றாய்சேர்ந்து காய்ந்து பொரிப்பொரியாக ஆகி பிறகு நாறினால் சர்க்கரா எனப்பெயர். இது முற்றினால் அதில் ஒருவித கிருமி உண்டாகும். அது எகிரைச்சாப்பிடும். இதற்குக் கபாலிகை எனப் பெயர். ரக்தபித்தத்தால் பல்லில் கருப்புவிழும். இதற்குச்யாவம் எனப்பெயர். திரிதோஷ கோபங்களால் பற்களின் அடியை ஆச்ரயித்து பற்களுக்கு இடையில்வீக்கம், இளைப்பு, ரத்தம், பல்ஆட்டம், பழுத்து கிருமி உண்டாதல் இவை நேரும். இதற்கு கிருமி தந்தம் எனப்பெயர். இவ்விதம் பற்களில் பத்துவியாதிகள். எகிரில் வியாதிகள் இனி சொல்லப்படும்.

## எகர் நோய்கள்.

கபம் ரக்தம் இவைகளால் சோணிதம் தூஷித்து எகிரைத் தின்று மிருதுவாகக்கொதறி மிகவும் சங்கடம் உண்டானால் இதற்கு சீதாதம் எனப்பெயர். எகிர் சூடாகவும் சிகப்பாகவும் ஆகி வீங்கி ரத்தம் ஒழுகி அது வெளியில் போகாமல் பல் இளகி எகிர்வலியும் ஏற்பட்டால் பித்த ரக்தங்களால் ஏற்பட்ட பித்தோபகுசம் எனப் பெயர். பல்லுக்கு அடியில் வீங்கி இலந்தைக் கொட்டைபோல் ஆகி கட்டியாகப்பழுத்து எகிரில் வலியும் சிவத்தலும் ஏற்பட்டு உள்ளும் வெளியும் வலியுடன் வீங்கி நன்றாகச்சிவந்து உடைந்து ரத்தம் சீ ஒழுகினால் தந்தவித்ரதி எனப்பெயர். ரக்தபித்தங்களால் அடியில் வீங்கி வலியுடன் ஊத்தை வெளிவந்தால் ஸுஷிரம் எனப்பெயர். ஸன்னிபாதஜ்வரத்துடன் பல் இளகி எகிரில் துளை ஏற்பட்டு சீவிழுந்தால் மஹாஸுஷிரம் எனப்பெயர். கடைவாய்ப்பல்லில் ஆணிபோல் புறப்பட்டு கழுத்து, கண்டம், முதலியன வலித்து ஆகாரம் செல்லாமல் அதிகம் சங்கடம் உண்டானால் அதிமாம்ஸம் எனப்பெயர். பல் தேய்க்கும்பொழுது எகிர் விண்டு பல் இளக்கம் உண்டானால் விதர்ப்பை எனப்பெயர். பல்லின் அடியில் ஏற்படும் வியாதிகளுக்கு உடன்

210182



சிகித்ஸை செய்யாமல் [illegible] எகரில் ஒரு வியாதியாக ஏற்பட்டு தாமரைத்தண்டுபோல் ஆகி பழுத்து சீயும் ரக்தமும் வரும். மாம்ஸம் விண்டுவரும். இதற்கு கதி எனப்பெயர். இது திரிதோஷம், ரக்தம், ஸன்னிபாதம், இவைகளால் காணுமாதலால் ஐந்து பேதமாக இதைப்பிரிக்கலாம். இது ஐந்துக்கும் கதி எனப்பெயர். இவைகளின் பேதத்தை லக்ஷணங்களால் தெரிந்து சிகித்சை செய்தால் சமனம் ஏற்படும்.

குறிப்பு:—பற்களுக்கு ஆதாரமான அடிபாகத்திலுள்ள மாமிசத்தை எகர் எனச்சாதாரணமாக ஜனங்கள் சொல்லுவார்கள். அதில் 13 வியாதிகள் காணுவதாக அஷ்டாங்கஹிருதயத்தில் கூறப்படுகின்றன. அவையாவன—(1) சீதாதம் (2) உபகுசம் (3) தந்தபுப்புடம் (4) தந்தவித்ரதி (5) ஸுஷிரம், (6) மஹாஸுஷிரம் (7) அதிமாம்ஸம் (8) விதர்ப்பம் (9) கதி இது ஐந்துவிதம் ஆக மொத்தம் 13. சில நூல்களில் (1) பரிதரம் (2) பரிவேஷ்டம் என்ற இரு பேதங்களைச் சேர்த்து மொத்தம் 15 விதங்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

## ஜிஹ்வாரோகம்.

வாதத்தால் வறவறப்பாகக் கறுத்து நாக்கு வீங்கினால் அது வாததூஷிதை எனப்பெயர். பித்தத்தினால் சிவந்து நுரைத்து சீ வடியும். சிறுசிறு சிரங்குபோல் கிளம்பி சூடு எரிச்சல் இவைகளால் தொடமுடியாமல் ஆகும். இதற்கு பித்ததூஷிதை எனப்பெயர். சிலேஷ்மத்தால் இலவம்பூபோல் கூராகச்சிவந்து தடிப்பாக இருந்தால் சிலேஷ்ம தூஷிதை எனப்பெயர். கப பித்தங்களால் நாக்கிற்குகீழ் வீக்கமும் நாக்கு சுரணையில்லாமல் மத்ஸ்யத்தின் கந்தமும் இருந்தால் அலஸம் எனப்பெயர். அடி நாக்கில் வீங்கிவேறொரு நாக்கு போல் கிளம்பி நுனி கூராகவும் இருக்கும். கபபித்த ரக்தங்கள் கோபித்து வாய் விண்டு ஊத்தை வெளிவரும். கஞ்சி சாதம் முதலியன இறங்காது. இதற்கு அதி ஜிஹ்வா எனப்பெயர். நாக்கிற்கு மேல் அவ்விதம் ஏற்பட்டால் உபஜிஹ்வா எனப்பெயர்.

குறிப்பு:—ஜிஹ்வாரோகம் என்பது நாக்கில் காணும் ரோகங்களாகும். அவை ஆறுவிதங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.



அவையாவன—(1) வாததூஷிதா (2) பித்ததூஷிதா (3) கபதூஷிதா (4) அலஸம் (5) அதிஜிஹ்வா (6) உபஜிஹ்வா.

## தாலுரோகங்கள்.

அண்ணாக்கில் (உள்நாக்கில்) சிரங்கு புறப்பட்டு வலியுடன் கறுப்பாகவும் ஏற்பட்டால் தாலுபிடகம் எனப்பெயர், மீன் முள் போல் அண்ணாக்கில் மிருதுவாகவும் தொட்டால் சொறசொறப்பாகவும் மூக்கில் ரக்தம் வருவதுடன் தொண்டையிலும் கழுத்திலும் தடையும் உண்டாகி இருமல் வரக்ஷி, வாந்தி, இவைகள் உண்டானால் கள சுண்டி எனப்பெயர். வலி குறைந்து அண்ணாக்கில் சதை வளர்ந்து ஒன்றுக்கொன்று சேர்ந்து இருந்தால் தாலுஸம்ஹதி எனப்பெயர். அண்ணாக்கில் தாமரைப்பூபோல் வந்தால் அர்புதம். சிலேஷ்மத்தால் ஆமைபோல் உண்டானால் கச்சபம்: இலந்தைக்கொட்டைபோல் இருந்தால் அது புப்புடம். அண்ணாக்கில் பழுத்து சீ வந்து நாற்றமும் வலியும் சூடும் இருந்தால் பூதிபாகம் எனப்பெயர். அதிக சிரமசிரமத்தாலும் ஜுரம் முதலியவைகளாலும் அண்ணாக்கு காய்ந்துபோகும். இதற்கு தாலுசோஷம் எனப்பெயர்.

குறிப்பு:—அஷ்டாங்கஹிருதயத்தில் தாலு ரோகங்கள் எட்டு என்று கூறப்பட்டிருக்கின்றன. அவையாவன—(1) தாலுபிடகா (2) களசுண்டிகா (3) தாலுஸம்ஹதி (4) அர்புதம் (5) கச்சபம் (6) புப்புடம் (7) பாகம் (8) தாலுசோஷம் அஷ்டாங்கஹிருதயத்தை யொட்டியே தாலு ரோகங்கள் எட்டும் ஸஹஸ்ரயோகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் மற்ற நூல்களில் (1) துண்டிகேரீ (2) அத்ருஷம்எனஇரண்டுபேதங்கள் அதிகமாகச்சொல்லப்பட்டிருக்கின்றன. தாலு என்பது தொண்டைக்குழிக்கு முன்பாக இருக்கும் பிரதேசம், டான்ஸில் முதலிய அவயவங்கள் இந்த தாலு பிரதேசத்தை ஆச்ரயித்திருக்கின்றன.

## களரோகங்கள்.

நாக்கிற்குக் கீழ் கழுத்தில் பெரிதான மாம்ஸமுளை ஏற்பட்டு பித்தத்தினால் உடன்பழுத்து சூடு எரிச்சல் முதலியன காணும். இது சீக்கிரம் விருத்தியடையும். ஜுரம், தாஹம் காணும். இதற்கு

ரோகணி எனப்பெயர். இந்த வியாதி மிகவும் அஸாத்தியம் ஒன்றறைநாளிலேயே கொல்லக்கூடியது வாதத்தினால் கன்னத்திற்குக் கீழ்பாகம் கண், காது, இவைகளில் வலியுடன் சீக்கிர விருத்தி அடைந்தால் வாதரோகணி எனப்பெயர். வெளுப்பாக பறபற என இருந்தால் சிலேஷ்மரோகணி எனப்பெயர். ரக்தத்தினால் காதிற்குள் வீங்கி பிளந்து பித்தலக்ஷணமும் கண்டால் ரக்தரோகணி எனப்பெயர். ஸர்வலக்ஷணமும் சேர்ந்தால் சன்னிபாத ரோகணி எனப்பெயர். எல்லா தோஷங்களும் சேர்ந்து கழுத்தில் இலந்தைக்கொட்டைபோல் உண்டானால் கிரந்திகம் எனப்பெயர். தொண்டையில் நெல்லைப்போல் மாமிசங்கள் வளர்ந்தால் சாலூகம் எனப்பெயர். வட்டமாக இருந்தால் விருந்தம் எனப்பெயர். பருத்திக்கொட்டைபோல் மிகவும் கடுகடுப்பாகத் தொண்டையில் உண்டானால் துண்டிகேரிகை எனப்பெயர். தொண்டையில் உள்ளிலும் வெளியிலும் நீர் சேர்ந்து வாழைக்காய் முதலியனபோல் வரும். ஜ்வரம் உண்டாகும். ஊத்தை வரும். இதற்கு களௌகம் எனப்பெயர். தொண்டைக்குள் வீங்கி வெளிப்பக்கம் பூராவாகவும் வீங்கி வலி இல்லாமல் ரக்தம் வந்து அன்னமும் விழுங்கமுடியாமல் போனால் வலயம் எனப்பெயர். முள் முருங்கைக் கட்டைபோலவும், முள் நிறைந்த தடிபோலவும், தலை, கண், முகம் முதலியவற்றில் வலியும் பழுப்பும் அதிகம் ஏற்பட்டால் சதக்னீ எனப்பெயர். தொண்டைக்குள் வீங்கி பழுத்து பி விழுந்தால் களவித்ரதி எனப்பெயர். கழுத்து வெளித்து வீங்கி சிறு பழுப்பு ஏற்பட்டால் களார்புதம் எனப்பெயர். வாயுவினால் கழுத்தில் வீங்கி அதிக குத்துவலியுடன் சிவந்து தடிப்பாக சிவந்த காய்புகள் ஏற்பட்டால் களகண்டம் எனப்பெயர். அன்றைக்கு அதிகம் வளரும். ருசிதெரியாமல் போகும். கடுகடுத்து பிப்பு உண்டாகும் இது சிலேஷ்மகண்டம். மேதஸ்ஸினால் இவ்விதம் வந்து வீங்கி தடித்து குட்டுடன் பேசமுடியாமல் தொண்டை கம்மி கழுத்து திருப்பமுடியாமல் போனால் மேதோகண்டம் எனப்பெயர். தொண்டையில் ஜலம் குறைந்து தொண்டை கம்மி வீங்கி கனத்து வரட்டு இருமலும் இருந்தால் ஸ்வரஹானி எனப்பெயர்.



குறிப்பு:-களம் என்பது தொண்டைக்குழியின் முன்பாகம். அதில்வரும் நோய்களுக்கு களரோகங்கள் எனப்பெயர். களரோகங்கள் 18 விதங்களாக அஷ்டாங்கஹிருதயத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன—(1) வாதரோஹிணீ (2) பித்தரோஹிணீ (3) கபரோஹிணீ (4) ரக்தரோஹிணீ (5) ஸந்நிபாதரோஹிணீ (6) சாலூகம் (7) விருந்தம் (8) துண்டிகேரிகா (9) களௌகம் (10) வலயம் (11) களாயுகம் (12) சதக்நீ (13) களவித்ரதி (14) களார்புதம் (15) வாதகலகண்டம் (16) கபகலகண்டம் (17) மேதோகலகண்டம் (18) ஸ்வரக்னம்.

## உள்வாய் முழுவதிலும்வரும் ரோகங்கள்.

வாதம் தோஷித்து உள்வாய் முழுவதும் புண்ணை உண்டுபண்ணி சிகப்பாகவும் வறவறப்பாகவும் மிருதுவாயும் இளக்கமாயும் இருந்து முள்போல் நிறைந்து வாய் திறக்கமுடியாமல் ஆனால் வாதமுகபாகமெனப்பெயர். முகரோகங்களாலும் குல்மரோகத்தாலும் வாயு மேல் முகமாக துர்நாற்றத்துடன் வந்தால் ஊர்த்வகதம் எனப்பெயர், பித்தத்தினால் பழுத்து உள்வாய் முழுவதும் சிறிதாகச் சிவந்து புண்களுண்டாகி வீங்கினால் பித்தமுகபாகம் எனப்பெயர். சிலேஷ்மத்தால் வெளுத்து சூடு குறைந்து இருந்தால் சிலேஷ்மபாகம் எனப்பெயர். கவிள் தடத்திற்குள் சிவந்து புறப்பட்டால் அர்புதம். இந்த அர்புதத்தைத் தேய்த்தாலும் அறுத்தாலும் விருத்தியாகித் தொந்திரவு செய்யும் நாலு லக்ஷணமும் சேர்ந்து கண்டால் சன்னிபாத முகபாகம். பல்தேய்க்காததால் முகத்தில் துர்நாற்றம் ஏற்பட்டால் பூதிவக்த்ரம் எனப்பெயர்.

குறிப்பு:-வாயின் உள்பாகம் முழுவதிலும் வரும் நோய்கள் எட்டு என அஷ்டாங்கஹிருதயத்தில் கூறப்பட்டுள்ளது. அவையாவன-(1) வாதமுகபாகம் (2) பித்தமுகபாகம் (3) ரக்த முகபாகம் (4) கபமுகபாகம் (5)ஸன்னிபாதமுகபாகம் (6) ஊர்த்வகதம் (7) பூதிவக்த்ரம் (8) அர்புதம்.

## சிரோரோகங்கள்.

புகை, பனி, வெய்யில், வியர்வை, இவை அதிகம் தாக்குவதாலும், தூக்கம் அதிகம் விழிப்பதாலும், ஜலத்தில் அதிகம் நீந்தி விளையாடுவதாலும், அதிகத் தூக்கத்தாலும், தலையை அதிகம் உயரத்தில் வைத்துப்படுத்துக் கொள்ளுவதாலும், அதிக பள்ளத்தில் வைத்துக் கொள்ளுவதாலும், கடற்காற்று அதிகம் படுவதாலும், துக்கத்தாலும், கள்ளு சாராயம் குடிப்பதாலும், அதிகம் சத்தம் போடுவதாலும், அங்கங்களில் ஏதாவது கெடுதல் வருவதாலும், கீழ்ப்பக்கமாக அதிகம் பார்ப்பதாலும், அதிகம் துர்கந்தத்தை முகர்வதாலும், தோஷங்கள் தலையில் பிரவேசித்து கீழே சொல்லப்படும் வியாதிகளை உண்டுபண்ணுகின்றன. வாதகோபத்தால் நெற்றிக்கட்டில் அதிக வலியும், நெற்றிபுருவம் இவை ஒன்று சேருமிடத்தில் பிளப்பது போல் வலியும், காது, கண், கழுத்து இந்த இடங்களில் அதிகவலியும், மூக்கில் ஜலம் வருவதும், நாடி துடிப்பதும், கைகளால் மர்த்திப்பதால் கொஞ்சம் சுகமும் ஏற்படும். இன்னும் பல கஷ்டங்கள் உண்டாகும். இது வாத சிரஸ்தாபம். தலையின் ஒரு பாகத்தில் மட்டும் குத்துவலி முதலியன கண்டால் அர்த்தாவபேதகம் எனப்பெயர். இது மாதம் ஒருதரம் அல்லது பக்ஷத்தில் ஒருதரம் அதிகமாக உண்டானால் கண் காது இவைகள் கெட்டுப்போகும். பித்தத்தால் தலைவலிவரும். தலையில் புகைச்சல் உண்டாகும். ஜுரம், வியர்வை, கிறுகிறுப்பு, கண்சூடு, இவை பகலில் அதிகமாகவும், இரவு குறைந்துமிருக்கும். சீதசிகித்சையால் கொஞ்சம் குறையும். இது பித்த சிரஸ்தாபம். சிலேஷ்மத்தால் வரும் தலைவலியில் அருசி, குளிர், தலைசூடு, சோம்பல், தலை அதிகம் கனத்தல், பகலில் வலி குறைந்து இரவில் அதிகமாகுதல், காதடைப்பு, வாந்தி, இமை வீக்கம் காணும், இது சிலேஷ்ம சிரஸ்தாபம். ரக்த சிரஸ்தாபம் பித்தசிரஸ்தாபம்போல் ஆனால் வலி பித்தசிரஸ்தாபத்தைவிட அதிகம் இருக்கும். எல்லாலக்ஷணங்களும் கலந்து இருந்தால் ஸந்நிபாதசிரஸ்தாபம். ஆகாரத்திரவிய தோஷத்தால் தலையில் விஷாம்சம் சேர்ந்து ரக்தமும் சீயும் கலந்து ஸன்னிபாத கோபத்தால் தலைக்குள் கிருமிக்கூட்டம் ஏற்பட்டு அவை ரக்தத்தைச் சாப்பிடும்பொழுது பல சங்கடங்கள்



உண்டாகும். சித்தப்பிரமம் ஜுரம், காஸம், வறவறப்பு, வீக்கம், பலக்குறைவு, துர்கந்தம், விரணம், கன்னம் சிரஸ்ஸு இவைகளில் ஏற்படும் பிப்பு, சோகை, மூக்கில்சிகப்புவெள்ளைகலந்த ஜலம்வடிதல், காதுகளில் சத்தம் ஆகிய இவை காணும் இது கிருமிசிரஸ்தாபம். தோஷங்கள் வாதத்தை முன்னிட்டு சிரஸ்ஸை விரைக்கச்செய்யும். இது எல்லா சமயத்திலும் ஏற்பட்டால் சிர: கம்பம் எனப்பெயர். தோஷங்கள் பித்தத்தை முன்னிட்டு ரக்தத்துடன் சேர்ந்து சங்கத்தில் வீக்கத்தை உண்டுபண்ணி வலி, சூடு, சிகப்பு, புத்திபிரமம், தாஹம், பிரலாபம் முதலிய பல தொந்திரவு செய்யும். முகம் மஞ்சள் நிறமாகும். இது துடங்கின உடன் சிகித்சை செய்தால் சுகப்படும். இல்லாவிடில் மூன்று நாளில் மரணம் நேரிடும். இதற்கு க்ஷிப்ரகாரி என்றும் சங்ககம் என்றும் பெயர். வாதம் பித்தத்துடன் சேர்ந்து புருவம், நெற்றி, கண், இவைகளில் பலவிதமான வலியை உண்டாக்கும். சூரிய உதயத்தில் வலி உண்டாகி உச்சம்வரையிலும் அதிகரிக்கும். பசி இருந்தால் மிகவும் அதிகப்படும். சீதம் உஷ்ணம் முதலியன சில சமயம் சுகமாகவும் சில சமயம் துக்கமாகவும் வியவஸ்தை இல்லாமல் இருக்கும். பிறகு குறையும். இதற்கு சூரியாவர்த்தம் எனப்பெயர். இவ்விதம் சிரோரோகம் பத்து. கர்ப்பத்தில் இருக்கும் குழந்தைக்கு சிரஸில் வாதகோபத்தால் வீக்கம் போல் உண்டாகி வலி இல்லாமல் இருந்தால் உபசீர்ஷகம் எனப்பெயர். பிடகா அர்புதம், வித்ரதி, என்ற மூன்று வியாதிகளை தோஷ லக்ஷணம்கொண்டு ஊகிக்கவேண்டும். வாதம் அதிகமானால் வாத வித்ரதி பித்தம் அதிகமானால் பித்தவித்ரதி சிலேஷ்மம் அதிகமானால் சிலேஷ்ம வித்ரதி இவ்விதமே பிடகையும் அர்புதமும் காண்க. பித்தம், ரக்தம், கபம், கிருமி இவை காரணமாகச் சீயுடன் காணும் சிரங்குகளுக்கு அருஷகம் எனப்பெயர். கப வாதங்களால் தலையில் அதிகம் அரிப்பும், சொரியும் மயிர்உதிரலும்தோல்உரிதலும்காணும். இது தாருணமெனப்படும். ரோம கூபத்தில் பித்தம் வாதத்துடன் விருத்தியடைந்து ரோமங்களை உதிரச்செய்யும் அப்பொழுது கப ரக்தம் ரோம கூபத்தை அடைந்து பிறகு மயிர் வளராமல் செய்தால் அது இந்திரலுப்தம் எனப்படும். சிலர் இதை குஞ்சா சாசா என வெல்லாம் சொல்லுவர். கலதியும் இந்திரலுப்தம்போல்தான்.

ஆனால் கலதிக்கு ரோமம் மெதுவாகப்போகும். இந்திரலுப்தத்தில் சீக்கிரம் போகும். வாதகலதியில் நெருப்புப்பட்ட இடம்போல் ஆகும். பித்தகலதியில் மஞ்சள் நரம்புகள் உண்டாகும். சிலேஷ்மகலதியில் தோல் கெட்டியாகவும் சூடாகவும் இருக்கும். எல்லா தோஷங்களும் சேர்ந்துவரும் கலதியில் எல்லா லக்ஷணங்களும் காணும். நகத்தின் பிரபைபோலவும் தீப்புண் போலவும் சூடு உண்டானால் இந்நோய் அஸாத்யமாக நினைக்கவேண்டும். தேஹ சிரமத்தாலும், தாக்கத்தாலும், கோபத்தாலும், சரீரச்சூடும், திரிதோஷமும் கோபித்து தலையில் சேர்ந்து தலை நரைத்துப்போம். இதைப்பலிதமென்பர். வாத நரை ஜலத்தின் நிறமாக இருக்கும். பித்தநரை மஞ்சள் நிறமாகும். கபநரை அதிகம் வெளுத்து இருக்கும். ஸன்னிபாத நரையில் எல்லா லக்ஷணமும் கலந்து இருக்கும். ஸன்னிபாத கலதியும், பலிதமும், வயதாகி ஏற்படுவதும் அஸாத்யம். இது ரஸாயனப்பிரயோகத்தால்தான் தீரும்.

குறிப்பு:–சிரோரோகங்கள் பத்துவிதமாகவும் கபாலரோகங்கள் ஒன்பதுவிதமாகவும் ஆக மொத்தம் 19 விதமாக அஷ்டாங்கஹ்ருதயத்தில் கூறப்பட்டிருக்கின்றன. அவையாவன–(1) வாத சிரஸ்தாபம் (சிரஸ்தாபம் என்பது தலைவலி எனப்படும்) (2) அர்த்தாவபேதகம் (3) பித்தசிரஸ்தாபம் (4) கபசிரஸ்தாபம் (5) ரக்தசிரஸ்தாபம் (6) ஸந்நிபாத சிரஸ்தாபம் (7) கிருமிசிரஸ்தாபம் (8) சிரக்கம்பம் (9) சங்ககம் (10) சூர்யாவர்த்தம். இவ்விதம் சிரோரோகம் பத்து. இனி கபாலரோகங்கள் ஒன்பதிற்கு விவரம் சொல்லப்படுகின்றது. (1) உபசிர்ஷகம் (2) பிடகா (3) அர்புதம் (4) வித்ரதி (5) அரும்ஷிகா (6) தாருணகம் (7) இந்திரலுப்தம் (சாசா என்று சிலர்) (8) கலதி (இது வாதகலதி, பித்தகலதி, கபகலதி, ஸந்நிபாதகலதி என நான்குவிதமாகும்) (9) பலிதம் இதுவே நரை. (இது வாதபலிதம், பித்தபலிதம், கபபலிதம், ஸந்நிபாதபலிதம், தலைவலியால் உண்டாகும் பலிதம் என ஐந்துவிதமாகும்). சிரோரோகங்களில் அநேக பேதங்கள் மாதவநிதானத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் அஷ்டாங்கஹ்ருதயமே ஸஹஸ்ரயோகத்திலும் அனுசரிக்கப்பட்டிருக்கின்றது.

2/1082

# குறிப்பு.

ஸம்ஸ்கிருத நூல்களில் சொல்லியுள்ள அரிய பெரிய மருந்துகளைச்செய்து வியாதிபெற தென்னாட்டினருக்கு வசதி மிகவும் குறைவாக விருக்கின்றது. பல ஆயுர்வேத மூலிகைகள் வடநாட்டிலேயே கிடைக்கின்றன. நமது நாட்டில் பல மூலிகைகளுக்குப்பெயரே தெரியவில்லை. தெரிந்த சில மூலிகைகளும் கிடைப்பதில்லை. மலையாளத்தில் சில மூலிகைகள் கிடைத்தபோதிலும் பல மூலிகைகள் அங்கும் துர்லபமாக விருக்கின்றன. நாம் பல வருஷங்களாக வடநாட்டிலிருந்தே பல மூலிகைகளை வரவழைத்து உபயோகித்து வருகிறோம். எல்லா வைத்தியர்களுக்கும் அந்த மூலிகை முதலியவைகள் சுலபமாகக் கிடைக்கும்படி நாம் ஓர் மூலிகை ஸ்டோர் ஏற்படுத்தத் தீர்மானித்திருக்கின்றோம். தற்காலம் அடியிற்கண்ட சரக்குகள் நமது கைவசமிருக்கின்றன. (1) பிடாலவணம் (2) ஸௌவர்சலவணம் (3) கட்பலம் (4) விருத்தகாரகம் (5) நாகபலா (6) அப்லவேதஸம் (7) பத்மகம் (8) ஸ்வர்ணமாக்ஷிகம் (பஸ்மம் செய்யாதது) (9) வைக்ராந்தம் (பஸ்மம் செய்யாதது) (10) ராஜாவர்தம் (11) ரஸாஞ்ஜனம். இவை யாவும் தென்னாட்டில் கிடைக்காத வஸ்துக்கள். வடநாட்டிலிருந்தே வரவழைக்கப்பட்டவைகள். காலக்கிரமத்தில் இன்னும் பல சரக்குகளையும் தயார்செய்ய உத்தேசித்திருக்கின்றோம். விலை விவரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

பண்டிட் S. நாராயண அய்யங்கார்,
நெ. 2, போலீஸ் ஸ்டேஷன் மேற்கு சந்து,
மதுரை.

Registered No. M. 4018.

# க்ஷயாந்தக ரஸம்.

க்ஷய நோய்களுக்கு (Pulmonary Tuberculosis) ஓர் ஒ-
வற்ற மருந்தெனச் சுதேச நூல்களில் கூறப்பட்டதாளக ப
வைக்ராந்த பஸ்மம், ஸ்வர்ணமாக்ஷிக சிந்தூரம், ஆகிய இம்மூன்
அளவுப்படி சேர்க்கப்பட்டு க்ஷயாந்தக ரஸமென்ற பெயரு
வெகு காலமாக அநுபவத்தில் பரிசீலிக்கப்பட்ட இம்மருந்து
நோய்களில் மிகுந்த குணம் கொடுக்கக் கூடியது. சுமார் 15
களுள் காய்ச்சல் முதலியவைகளைக் குறைத்துச் சில ம
களுக்குள் பூர்ண சுகத்தை அளிக்கின்றது. 4 அல்லது 5 ம
களுக்குள் க்ஷய நோய் பூர்ணமாக நிவர்த்தியாகும். இத்த
சுவர்ண பஸ்மம் சேர்த்துச் சாப்பிடுவதும் காகபலா லேகிய
அநுபானமாகக் கொள்வதும் மிகவும் நல்லது.

| | | |
|---|---|---|
| க்ஷயாந்தக ரஸம் | ஒரு மாத மருந்து விலை ரூ. | |
| ஷை ஸ்வர்ண சிந்தூரத்துடன் | ஷை | ஷை விலை ரூ. |
| காகபலா லேகியம் | ஷை | ஷை விலை ரூ. |

தபால் செலவு வேறு.

மருந்தைக் காலை 6-மணி, சாயங்காலம் 6-மணி ஆக இ
வேளைகளில் தேனில் குழைத்துச் சாப்பிட வேண்டும்.
கோதுமை, பருப்பு, தயிர், பால், நெய், வெண்ணை, பாதாம்ப
சாரப் பருப்பு, ஆரஞ்சு, கொடிமுந்திரிப் பழம், ஜீர்ணமாகக்
காய்கறிகள் முதலியன புஷ்டியாகச்சேர்த்துக் கொள்ளவும்.
காய்ச்சல் இருந்தாலும் ஸ்நானம் கூடாது. காய்ச்சல் நின்ற பி
தைல ஸ்நானம் செய்யலாம்.

குறிப்பு:—மருந்தைப் பரீக்ஷை செய்ய விரும்பும் வைத்
களுக்கு மாத்திரம் க்ஷயாந்தக ரஸம் (ஸ்வர்ண சிந்தூரமில்லா
பாதி விலைக்குக் கொடுக்கப்படும்.

விலாசம்:—

பண்டிட் நாராயண அய்யங்கார்,
2, கீர் போலீஸ் ஸ்டேஷன் மேல்புறம் சந்து, மதுரை.



| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |